

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

ஆண்டறிக்கை

2020

சொற்சுருக்கங்கள்

கா.சா	காணப்படாமைக்கான சான்றிதழ்
வி.ஆ	விசாரணை ஆணைக்குழு
ம.சா	மரணச் சான்றிதழ்
ஆ.செ	நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணி
வ.கா.அ.பா.ச.ச	வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம்
ச.செ.ச	சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
க.பா.ந.ஆ	கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு
பு.ஒ	புரிந்துணர்வு ஒப்பந்தம்
தே.ஒ.ந.அ.மொ.ச.மு.இ.வி.அ	தேசிய ஒருமைப்பாட்டு, நல்லிணக்க, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்ற மற்றும் இந்துசமய விவகார அமைச்சு
கா.ஆ.அ	காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
ச.உ.து.மு	சமூக உளவியற் துணை முலோபாயம்
ந.பொ.ஒ.செ	நல்லிணக்கப் பொறிமுறையை ஒருங்கிணைப்பதற்கான செயலகம்
ப.வ.கா.செ.கு	பலவந்தமாக வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பில் செயற்படும் ஐக்கிய நாடுகளின் செயற்குழு

உள்ளடக்கம்

1. **அறிமுகம்**.....04
2. **சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியான செயற்பாடுகள்**.....06

காணப்படாமைக்கான சான்றிதழ்.....07

இடைக்கால அறிக்கைகள்.....09

இடைக்கால நிவாரணம்.....11

சட்ட ஆலோசனைகளும் ஆதரவுகளும்.....14

காணாமற்போனோர் பற்றிய அறிக்கைகள்.....22

கொவிட்-19 நிவாரணம்.....13

மனித எச்சங்கள் பற்றி விசாரிப்பதற்கு நீதிசார் தத்துவங்களைப் பிரயோகித்தல்.....15

3. **விசாரணைகள்**.....21

அடையாளம் காணப்படாத மனித எச்சங்களைக் கண்டுபிடித்தல்.....22

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய

கையிருப்புத் தகவல்களைத் தொகுத்தல்.....24

முறைப்பாடுகள்.....25

தரவுத்தளம்.....30

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய

முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் பட்டியல்.....32

6. **நிறுவனஞ்சார் அபிவிருத்தி**.....38

பௌதீக வளாகங்களை நிறுவுதல்.....38

ஊழியர் ஆட்சேர்ப்பு.....39

பிராந்திய அலுவலகங்கள்.....40

செயன்முறைகள் மற்றும் விதிகளின் அபிவிருத்தி.....41

திறன்விருத்தி மற்றும் கற்றல் பகிர்வு.....42

தகவலுக்கான உரிமை.....43

7. **தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல்**.....44

பொது நிகழ்வுகள்.....45

ஊடகங்களுடனான தொடர்பு.....44

எண்ணிம வெளியீடு.....46

8. **நினைவேந்தலும் நினைவுகூர்தலும்**.....46

1. அறிமுகம்

1.1 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம் (கா.ஆ.அ சட்டம்) 2016 ஓகத்து மாதம் இயற்றப்பட்டது. 2018 ஆம் ஆண்டு பெப்பிரவரி 28 ஆந் திகதி அன்றைய சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிரிசேன அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் சனாதிபதி சட்டத்தரணி திரு.சாலிய பீரிஸ் அவர்களை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராகவும் கலாநிதி நிமல்க பெர்னாண்டோ, திரு. எஸ்.கே.லியனகே (சட்டத்தரணி), ஓய்வு பெற்ற மேலணித் தளபதி மொஹந்தி பீரிஸ், திரு. ஜயதீப புண்ணிய மூர்த்தி, திரு. மிராக் ரஹீம் மற்றும் திரு. கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகியோரை ஆணையாளர்களாகவும் நியமித்தார்[1].

1.2 காணாமற்போன ஆட்களுடைய சூழ்நிலைகளையும் அவர்களது நிலையையும் விளக்கும் கடப்பாடு கா.ஆ.அலுவலகத்துக்கு உண்டு. அத்தகைய நிகழ்வு மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்குவதும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கு நிவாரணமளிக்கும் காரணிகளைக் கண்டறிவதும் கிடைத்திருக்கும் எல்லாத் தரவுகளையும் தகவற் தளத்தில் ஒன்றிணைத்தலும் அலுவலகத்தின் கடப்பாடாகும்.[2]

1.3 காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளாக; காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கு உரிய காணப்படாமைக்கான சான்றிதழ்களை பதிவாயர் நாயகத்தின் திணைக்களம் ஊடாக வழங்குதல், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது உறவினர்களுக்கு சமூக உளவியல் ஆதரவு நல்கக்கூடிய நிர்வாகம் சார் உதவியையும் நலன்புரி சேவைகளையும் வழங்குதல் அல்லது மேம்படுத்தல், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கோ அவர்களது உறவினர்களுக்கோ இழப்பீட்டினை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு சிபாரிசுகளை வழங்குதல், பாதிக்கப்பட்டவரையும் சாட்சியையும் பாதுகாக்கும் ஒழுங்கை விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது தகவல்களை உள்ளடக்கிய தரவுத்தளமொன்றை உருவாக்கலும் பேணலும் அதனை முகாமை செய்தலும், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய காரணிகள், நிகழ்வுகள், விளைவுகள் போன்றவற்றை விளக்கும் பொதுசன விழிப்பூட்டல்களை உருவாக்குதல், பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளத் தமக்குள்ளேயே ஒத்தாசையாக இருப்பதை மேம்படுத்தலும் பொருளாதார, சமூக உளவியல், சட்ட, மற்றும் நிருவாக ரீதியாக அவற்றை அணுகுவதை உறுதிப்படுத்தலும்[3].

1.4 காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அதன் திறன்மிகு செயற்பாட்டுக்காக விதிகளை உருவாக்கவும் பால்மையுணர்வு சார்ந்த வழிகாட்டல்களை விருத்தி செய்யவும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யவும், நிறுத்தவும், தேவைக்கேற்ப

[1] 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம் பிரிவுகள் 4,5,6. **OMP சட்டம்**

[2] கா.ஆ.அ சட்டம், பிரிவு 10.

[3] கா.ஆ.அ சட்டம், பிரிவு 1

பிரிவுகளை நிறுவவும், எனப் பொதுவான தத்துவங்களைக் கொண்டுள்ளது[4]. மேலும் எதிர்காலத்தில் காணாமலாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பது போன்ற பரந்துபட்ட பிரச்சனைகளுக்கான சிபாரிசுகளை வேறு அரச அதிகாரிகளுக்கு வழங்குவதற்கும் காணமலாக்கப்பட்டோரை நினைவுகூர்வதனை ஏற்புறுதி செய்வதற்கும், வழிவகைகளை ஏற்படுத்துவதற்கும், அடையாளம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத உடலங்களைக் கையாளுவதற்கும், காணாமற்போனோர் பற்றிய பிரச்சினைகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ளத்தக்க தகவல்களை வெளியீடு செய்வதற்கும், காணாமற்போனோர் பற்றிய தேசிய சட்டங்களையும் விதிமுறைகளையும் விருத்தி செய்வதற்கும், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கோ அவர்களது உறவினர்களுக்கோ அவர்களது சமூக பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கான இழப்பீட்டினை வழங்குவதற்கும் சமூக, உளவியல் ஆதரவினை வழங்குவதற்கும் தத்துவம் பெற்றுள்ளது[5].

1.5 விசாரணைகளை நடத்துமுகமாக, முறைப்பாடுகளைப் பெறுவதற்கும், விசாரணைகளைத் தொடக்கி வைப்பதற்கும், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் இருப்பிடம் பற்றி புலனாய்வு செய்வதற்கும் எவரையும் கா.ஆ. அலுவலகத்துக்குப் பிரசன்னமாக வைத்து முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அல்லது ஆவணம் சமர்ப்பிப்பதற்கும் அல்லது வேறேதேனும் விடயத்துக்கும் இரகசியத் தன்மை பேணப்பட வேண்டிய தகவல்களையோ தனிப்பட வழங்கிய தகவல்களையோ ஏற்றுக்கொள்வதற்கும், இரகசியத் தன்மை பேணப்படும் என்ற நிபந்தனையில் தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கும், அகழ்வு மேற்கொள்ள வேண்டும் என்றோ புதைக்கப்பட்ட உடலங்களினைத் தோண்டி எடுக்க வேண்டும் என்றோ நீதிவான் நீதிமன்றம் ஒன்றுக்கு உத்தரவைப் பிறப்பிக்க விண்ணப்பம் கோருவதற்கும், கண்காணிப்பாளராக செயற்படுவதற்கும், ஏதேனும் அரச நிறுவனத்தின் உதவி அவசியப்படும் போது அதற்கான வேண்டுகோளை விடுப்பதற்கும், முன்னனுமதியின்றி எந்தவிதமான இடத்திலும் தடயத் தேடுதல் நடத்துவதற்கும், சம்பந்தப்படும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் புரியப்பட்ட குற்றங்களை அறிக்கையிடுவதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் கா.ஆ. அலுவலகத்துக்கு அதிகாரமுண்டு[6]

1.6 கா.ஆ. அலுவலக அதிகாரியை அவமதிக்கும் ஆளெவரும் குற்றவாளியாவர். அது கா.ஆ அலுவலகத்துக்குப் பிரசன்னமாகத் தவறும் பட்சத்திலோ, கா.ஆ. அலுவலகத்தினால் வழங்கப்பட்ட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றையோ வேறு விடயமொன்றையோ சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலோ

[4] கா.ஆ.அ சட்டம், பிரிவு 11
[5] கா.ஆ.அ சட்டம், பிரிவு 13(1).
[6] கா.ஆ.அ சட்டம், பிரிவு 12

கா.ஆ. அலுவலகத்தினால் ஒருவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலிலோ அல்லது எழுத்து மூலம் பிறப்பிக்கப்பட்ட கட்டளையிலோ குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் சம்பந்தமில்லாமல் காரணமின்றி மறுமொழிகூற மறுக்கும் பட்சத்திலோ கா.ஆ. அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் அவரது கடமையைச் செய்வதற்குத் தடை உண்டாக்கும் படசத்திலோ அல்லது வேண்டுமென்றே கா.ஆ. அலுவலகத்தின் செயற்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் பட்சத்திலோ உண்டாகும் என்ற காரணிகளைக் கொண்டுள்ளது[7]

1.7 க்ணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளையும் நலன்களையும் பேணுவதுடன், சட்டவாட்சியையும் கருத்திற்கொண்டு கா.ஆ. அலுவலகம் தனது கடமையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேசமயம் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களையும் கொள்கைகளையும் செயலில் அமுல்படுத்தியும் உள்ளது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது உறவினர்களின் மூலம் நேரடியாயகத் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை கா.ஆ. அலுவலகம் ஏற்று செயற்பட்டுள்ளது. 2018 மற்றும் 2019 காலப்பகுதியில் கா.ஆ. அலுவலகத்தை செயற்படுத்து முகமாக உறவினர்களின் கருத்துகளை வெளிக்கொணரும் பொது மக்கள் சந்திப்புகள் அலுவலகத்தினால் நடாத்தப்பட்டன. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணி மூலம் வழங்கப்பட்ட சிபாரிசுகளை ஏற்றும் அலுவலகம் செயற்பட்டுள்ளது[8]

2. சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியான செயற்பாடுகள்

2.1 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரினதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளைப் பாதுகாக்கும் கடப்பாடு கா.ஆ. அலுவலகத்துக்கு உண்டு. அவர்களை பொருளாதார ரீதியாகவும், சமூக உளவியல் ரீதியாகவும் சட்டரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் ஆதரவு பெறக்கூடிய வழிவகைகளை வளப்படுத்துவதும் அலுவலகத்தின் கடப்பாடாகும்[9]. மேலும் காணாமலாக்கப்படுதல் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது, இறந்த உடலங்களைக் கையாள்வது போன்ற விடயங்கள் சம்பந்தமாக அரச அதிகாரிகளுக்கு சிபாரிசுகளை வழங்குவதற்கும் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரினதும் அவர்களது உறவினர்களதும் சமூக பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் கா.ஆ. அலுவலகத்துக்கு அதிகாரமுண்டு[10].

2.2 மேற்படி கடப்பாட்டை நிறைவேற்றும் வகையில் காணப்படாமைக்கான சான்றிதழ் தொடர்பிலான சட்ட மற்றும் கொள்ளை ரீதியிலான பரிந்துரைகளை கா.ஆ.அ

[7] கா.ஆ.அ சட்டம், பிரிவு 24.

[8] நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைக்குழுவின் இடைக்கால அறிக்கை ஆலோசனை (ஓகத்து 2016); நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைக்குழுவின் இறுதி அறிக்கை பாகம். I மற்றும் II (17 நவம்பர் 2016

[9] கா.ஆ.அ சட்டம், பிரிவு 2(ஆ), 10(இ), 13(உ), ஊ

[10] கா.ஆ.அ சட்டம், பிரிவு 13(ஒ) (i), (iii), (vii)

மேற்கொண்டுள்ளது. காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரினது உறவினர்களுக்கு அக் காணப்படாமைக்கான சான்றிதழைப் பெறும் வகையிலான இடைக்கால அறிக்கையினை வழங்குதல், 2019 இற்கான பாதீட்டில் பிரேரிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தை அமுல்படுத்தல், இறந்த உடலங்கள் பற்றிய விசாரணைகளின் போது நீதிசார் அதிகாரங்களைப் பிரயோகித்தல், காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரினது உறவினர்களுக்கு கொவிட் நிவாரணம் வழங்குதல் என்பவற்றுடன் தனிப்பட்ட முறைப்பாடுகளில் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கைகளுக்கு அமைவாக சட்ட மற்றும் நிருவாக ரீதியான உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

காணப்படாமைக்கான சான்றிதழ்

2.3 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பகளுக்குக் காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவதை அங்கீகரிக்கின்றது. காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோருக்கு சட்டபூர்வமான தன்மையை வழங்கும் ஆவணமாகிய இச்சான்றிதழ் அவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழின்றி நிர்வாக மற்றும் நிதி ரீதியான சேவைகளையும் வேறு நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது. கா.சா வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட முரண்பாட்டினால் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கு வழங்கப்படுகின்றது. இது அரசியல் குழப்பம், சமூகக் குழப்பங்கள், வலிந்து காணாமலாக்கப்படுதல், அல்லது ஆயுதப் படைகளின் உறுப்பினராகவோ பொலிஸ் உறுப்பினராகவோ இருந்து அந்த நடவடிக்கைகளின் போது காணாமற்போனதாகக் கூறப்படும் விடயங்களை உள்ளடக்குகின்றது.

2.4 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் அதிக குடும்பங்கள் காணப்படாமைக்கான சான்றிதழ் பெறுவதில் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பெருமளவில் அலுவலர்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வின்மையும் காணப்படாமைக்கான சான்றிதழ் இயல்பாகவே மரணச் சான்றிதழாகிவிடும் என்கின்ற பிழையான கருதுகோளுமே இதற்கான காரணங்களாகும்.

2.5 மரணப் பதிவுச் சட்டம்[11] கா.சா பெறுவதற்கான பொதுவான செயன்முறைகளைக் குறிப்பிடுகின்றது. (i) மாவட்டப் பதிவாளர் மேற்கொள்ளும் விசாரணை மூலம் (ii) கா.ஆ. அலுவலகம் மூலம் வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கை[12] மூலம் காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்படுவதற்கான அல்லது முன்னர் விசாரணை ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்ட ஓர் அறிக்கை ஊடாக

[11] 2016 இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் பிரிவு 8அ – 8உ
[12] 2016 இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் பிரிவு 8எ

காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒரு விசேட படிமுறை. அரச அலுவலர்களிடையே காணப்படும் விழிப்பின்மையும் இவ்விரு படிமுறைகள் பற்றிய குழப்பமுமே அக்குடும்பங்கள் காணப்படாமைக்கான சான்றிதழ் பெறுவதைச் சிக்கலுக்குள்ளாக்குகியுள்ளன.

2.6 குடும்பங்களுக்கு காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவதை ஊக்குவிப்பதற்கும் அதனைத் துரிதப்படுத்துவதற்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் கா.ஆ.அ பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துடன் இணைந்தே செயற்பட்டு வருகின்றது. 2019 மே மாதம் கா.ஆ.அ மற்றும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் இணைந்து கைச்சாத்திட்ட கடிதத்தை அடுத்து சட்ட ஏற்பாடுகளைத் தெளிவூட்டும் வண்ணம் கா.ஆ.அ திணைக்களத்தின் நியமித்த உத்தியோகத்தர்களுடனும் மாவட்டப் பதிவாளர்களுடனும் ஒருமித்த தொடர்பை ஏற்படுத்தியது. அது பொது மற்றும் விசேட படிமுறைகளின்படி[13] காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவதற்கு மாவட்டப் பதிவாளர்களும் உதவிப் பதிவாளர்களும் பின்பற்ற வேண்டிய செயற்பாட்டை விபரித்து பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் சார்பில் கா.ஆ.அ உருவாக்கிய சுற்றறிக்கைகளை விபரிக்கின்றது.

2.7 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் காணப்படாமைக்கான சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான இடைக்கால அறிக்கைகள்[14] வழங்குவது கா.ஆ.அ இன் பொறுப்பாகும். இதனால் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துக்கு இடைக்கால அறிக்கைகள் வழங்கப்பட்டது தொடர்பில் கா.ஆ.அ பகுதி பகுதியாக தகவல் வழங்குகின்றது. இது குடும்பங்களுக்கு காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவதைத் துரிதப்படுத்தும்.

2.8 குடும்பங்களின் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து பதிவாளர் நாயகத்துக்கும் அனைத்து வலயங்களின் பதிவாளர்களுக்கும் கா.ஆ.அ இனால் வழங்கப்பட்டஇடைக்கால அறிக்கைகளின் செல்லுபடித் தன்மையை ஏற்று அங்கீகரிக்கும் அறிவித்தல் ஒன்றை கா.ஆ.அ 2020 செப்ரம்பரில் வெளியிட்டது.

2.9 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் கா.சா அல்லது மரணச் சான்றிதழ் பெறுவது தொடர்பில் அனுப்பிய விண்ணப்பங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றவற்றை ஒவ்வொரு முறைப்பாடாக எடுத்து மாவட்டப் பதிவாளர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர்களிடம் கா.ஆ.அ கலந்துசாவியது.

[13] 2016 இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் பிரிவு 8அ-8உ மற்றும் 8எ
[14] 2016 இன் இல.14 கா.ஆ.அ சட்டம் பிரிவு 13 (1)(அ)(i)

இடைக்கால அறிக்கைகள்

2.10 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இடைக்கால அறிக்கைகள் வழங்குவது கா.ஆ.அ இன் பணியாகும். விண்ணப்பிக்கப்பட்டுள்ள ஆள் காணாமல் போனவர்தான் என்று முடிவுறுத்துவதற்கு விசாரணை நடத்துவதை விடுத்து போதிய தரவுகள் இருக்குமிடத்து இது வழங்கப்படும்[15]. இவ் இடைக்கால அறிக்கையின் நோக்கம் அந்த காணாமற்போன ஆளுக்கு பதிவாளர் நாயகம் காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவதை ஏதுவாக்குவதே ஆகும்[16].

2.11 கா.ஆ.அ சட்டத்தின்[17] விதிப்புரையின்படியும் மரணப் பதிவுச் சட்டத்தின்[18] விதிப்புரையின்படியும் கொள்கைகள், செயன்முறைகள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கி இடைக்கால அறிக்கைகள் வழங்கும் செயற்பாட்டை 2019 ஆம் ஆண்டு கா.ஆ.அ ஒழுங்குபடுத்தியது. 2020 சனவரியில் கா.ஆ.அ துரித விசாரணை ஒன்றைத் தொடக்கி வைத்ததுடன் 2020 சனவரி 28 ஆந் திகதி முதலாவது இடைக்கால அறிக்கையைக் காணாமல் போன ஆளொருவரின் உறவினருக்கு கொழும்பில் வைத்து வழங்கியது.

2.12 கா.ஆ.அ இற்கு இடைக்கால அறிக்கை வழங்குவதற்கும் மாவட்ட மட்டங்களில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஊழியர் ஆட்சேர்ப்பு இன்னும் நிறைவு செய்யப்படாமலேயே உள்ளது. கா.ஆ.அ தனது திட்டமிட்ட மாவட்டமட்ட விசாரணை மேற்கொள்ளலைக் கைவிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. ஏனெனில் அது நாடு முழுவதும் சென்று நடமாடும் விசாரணை அலகுகளை அமைத்து பயிற்றுவிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் கொண்ட ஊழியர்களைக் கொண்டே செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

2.13 இடைக்கால அறிக்கை வழங்குவது தொடர்பில் குடும்பங்கள் மூலம் கிடக்கப்பெற்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கா.ஆ.அ இன் பிராந்திய அலுவலகங்களுக்குச் சென்று விசாரணைகளை நடாத்தி இடைக்கால அறிக்கைகளை வழங்குவதற்கு நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய 4 பேரை பகுதி நேர விசாரணை அதிகாரிகளாக நியமித்து அச் செயற்பாட்டை கா.ஆ.அ அமைத்துள்ளது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக இச்செயற்பாடு மேலும் தடைப்பட்டதுடன் கொள்ளை நோய் காரணமாக ஏற்பட்ட முதலாவது முடக்கம்

[15] 2016 இல. 14 கா.ஆ.அ சட்டம் பிரிவு 13 (1)(அ)(i)
[16] 2016 இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் அல்லது பதிவாளர் நாயகம் கா.சா வழங்கக்கூடிய ஏனைய சட்டம்
[17] 2016 இல. 14 கா.ஆ.அ சட்டம் பிரிவு 13 (1)(அ)(i)
[18] 2016 இன் இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

மற்றும் அதனைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட பயணத் தடை போன்றவையும் அதனைத் தடைப்படுத்தியது.

2.14 இத்தனை தடைகளையும் மீறி, கா.ஆ.அ இடைக்கால அறிக்கைகள் கோரும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டும் செயற்படுத்திக் கொண்டும் வந்தது. காணாமல் போனோர் தொடர்பிலான பூர்வாங்க மதிப்பீடுகளான ஆவணங்களின் பூரணத் தன்மை, கா.ஆ.அ சட்டத்தின்படியான சட்டரீதியான தேவைப்பாடுகள்[19], இடைக்கால அறிக்கை வழங்குவது தொடர்பிலான கா.ஆ.அ இன் கொள்கை போன்றன பூரணமடைந்துள்ளன. இந்த எண்ணிக்கையைக் கொண்டு குறைந்தபட்ச சட்டரீதியான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுடனான முறைசார் விசாரணைகளை கா.ஆ.அ நடத்தியது. 2020 இற்குள் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு மொத்தமாக 68 இடைக்கால அறிக்கைகள் வழங்கப்பட்டன.

2.15 2020 ஆம் ஆண்டுக்கான மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு:

இடைக்கால அறிக்கைகளுக்காகப் பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	234
ஆவணச் சமர்ப்பிப்பு மற்றும் அடிப்படைச் சட்டரீதியான தேவைப்பாடுகள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி நிறைவு செய்யப்பட்ட பூர்வாங்க மதிப்பீடுகளின் எண்ணிக்கை	234
விசாரணைகள் நடத்துவதற்குத் தகுதி பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை	148
விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் இடைக்கால அறிக்கை வழங்குவதற்குச் சிபாரிசு செய்யப்பட்ட எண்ணிக்கை	120
வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கைகளின் எண்ணிக்கை	68

2.16 2020 ஒக்ரோபர் மாதம் சில மாகாணங்களுக்கு விதிக்கப்பட்ட இரண்டாவது முடக்கநிலையும் பயணத்தடையும் காரணமாக கா.ஆ.அ நிகழ்நிலை ஊடாக விசாரணைகளை முன்னெடுத்தது. கா.ஆ.அ இன் சட்டப் பிரிவைச் சேர்ந்த விசாரணை அலுவலர்கள் விண்ணப்பதாரர்களுடனும் சம்பந்தப்பட்டவர்களுடனும் மெய்நிகர் நேர்காணலை நடத்தினர். 2020 நவம்பரில் இது வெற்றியளித்ததையடுத்து விசாரணை அலுவலர்கள் கொழும்பிலிருந்தும் விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாணம் மாத்தறை மன்னார் போன்ற பிராந்திய அலுவலகங்களுக்கு சமுகம் தந்தும் நிகழ்நிலை விசாரணைகளை கா.ஆ.அ நடாத்தியது.

2.17 இடைக்கால அறிக்கைகள் வழங்குவது தொடர்பில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விசாரணைச் செயன்முறைகள் உள்ளடங்கலாக கா.ஆ.அ இன் வளர்ந்துவரும் கொள்கைகளுக்கும் செயன்முறைகளுக்கும் மேலதிகமாக மேம்பட்டதொரு விசாரணைச் செயன்முறை 2020 இல் ஒழுங்கமைக்கப்பட்டது.

[19] 2016 இல. 14 கா.ஆ.அ சட்டம் பிரிவு 13 (1)(அ)(i)

இடைக்கால அறிக்கைகள் வழங்கும் செயற்பாட்டில் உள்ள ஊழியர் பற்றாக்குறை மற்றும் கொவிட்-19 கொள்ளை நோய்ப்பரவல் காரணமாக ஏற்பட்ட மட்டுப்படுத்தல்கள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே இச்செயன்முறை ஒழுங்கமைக்கப்பட்டது. குறிப்பாக நிகழ்நிலை விசாரணைகளின் போது விண்ணப்பதாரர்களுக்கும் குடும்பங்களுக்கும் துணை நல்கும் வண்ணம் பிராந்திய அலுவலகங்களில் குடும்ப நல அதிகாரிகாரிகள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

2.18 2020 இல் மேலும் பல உள்ளக செயன்முறைகளும் ஒழுங்கமைக்கப்பட்டன. இடைக்கால அறிக்கைகளுக்கான விசாரணைகளை மேற்கொள்ளும் போது பிராந்திய அலுவலகங்களுக்கான உள்ளக செயன்முறை, பதிவுகளைப் பேணுவதற்கான செயன்முறைகள், விசாரணை அலுவலர்களுக்கான செயன்முறைகளும் வழிகாட்டல்களும், இடைக்கால அறிக்கைகளுக்கான மெய்நிகர் நேர்காணல்களையும் நிகழ்நிலை விசாரணைகளையும் நடத்துவதற்கான வழிகாட்டல்கள், விசாரணை நடத்தும் சமயங்களில் விசாரணை அலுவலர்களும் பிராந்திய அலுவலக ஊழியர்களும் பின்பற்ற வேண்டிய கொவிட்-19 வழிகாட்டல்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அவை உள்ளன.

2.19 கொள்ளை நோய் மூலம் ஏற்பட்ட சவால்கள் மற்றும் நிகழ்நிலை விசாரணையில் பங்குபற்றும் செயன்முறை போன்றவற்றுக்கு அப்பால் குடும்பங்கள் தொடர்ச்சியாக இடைக்கால அறிக்கைகளைக் கோரிக்கொண்டிருப்பது கா.ஆ.அ இன் அவதானமாகும். ஏனெனில் அவ்விடைக்கால அறிக்கைகளே தமது அன்புக்குரியவர்களைக் காணாமல் போனவர்களாக அங்கீகரிக்கின்ற ஒரே உத்தியோகபூர்வ ஆவணமாகும் என்பதுடன் அதுவே கா.சா பெறுவதற்கும் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கும் அவர்களை ஏதுவாக்கும்.

இடைக்கால நிவாரணம்

2.20 2018 ஒகத்து மாதத்துக்கான இடைக்கால அறிக்கையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சில முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக காணாமல் போனதன் விளைவுகளால் உணர்வு பூர்வமாகவும் சமூக பொருளாதார ரீதியாகவும் அல்லலுற்றுள்ளனர் என்பது கா.ஆ.அ இன் அவதானிப்பாகும் என்பதுடன் அவர்கள் அரசின் மூலம் ஒன்றில் குறுகிய உதவி பெற்றவர்களாகவோ அல்லது உதவி பெறாதவர்களாகவோ இருக்கின்றனர்[20] பல முறைப்பாடுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர் முதன்மை வருமானம் ஈட்டும் ஆட்களாக – கணவனாகவோ மகனாகவோ - இருந்துள்ளார். மனைவிமார்களையும் வயது முதிர்ந்த பெற்றோரையும் இளம் பிள்ளைகளையும் விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். வருமானமீட்டலும் இல்லாமல் காணாமல் ஆக்கப்பட்டவருக்கான ஏனைய

[20] கா.ஆ.அ இடைக்கால அறிக்கை (2018), பந்தி 35.

நலன்களையும் ஊதியங்களையும் சமூக உதவிகளையும் பெற்றுக் கொள்ளும் வசதிகளும் அற்றவர்களாக இக்குடும்பங்கள் இருக்கின்றன.

2.21 சில குடும்பங்கள் எதிர்கொள்ளும் கடுமையான வறுமை நிலைமையை அறிந்து, 2018 ஆம் ஆண்டின் ஓகத்து மாத இடைக்கால அறிக்கையின் பந்தி 45(அ)-(ஊ) இல் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுள் மிகவும் நலிவுற்ற குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் முன்னதான இடைக்கால நிவாரணம் ஒன்றை வழங்கும் திட்டங்களை கா.ஆ.அ பரிந்துரை செய்தது. இதன் விளைவாக 2019 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் ரூபா. 500 மில்லியன் தொகையை இதற்கு ஒதுக்கீடு செய்யும் பிரேரணை சமர்ப்பித்தது. இதன் மூலம் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் ஆயுதப் படைகளின் உறுப்பினர்களாகவும் பொலிஸ் உறுப்பினர்களாகவும் இருந்து காணாமல் போனதாக அடையாளம் காணப்பட்டோர் அடங்கலாக மாதாந்த நிவாரணமாக ரூபா. 6000 வழங்குவதற்கும் அவர்கள் காணப்படாமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அதனைச் செயற்படுத்துவதற்கும் தீர்மனிக்கப்பட்டது.

2.22 இடைக்கால நிவாரணம் பெறும் தகுதிநிலையாக காணப்படாமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் விதித்ததுடன் அதை மரணப் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி[21] பதிவாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் வெளியிட்டது.

2.23 கா.ஆ.அ அரசாங்கத்துக்கு இடைக்கால நிவாரணம் பெறுவதற்கான தகுதிநிலையைப் பரந்துபட்டதாக ஆக்குவதற்கான ஒழுங்குபடுத்தல்களை வழங்கியது. 2016இல் கா.சா. சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் காணாமல் போன ஆட்கள் கா.சா பெற்றிருக்காததன் காரணமாக அவர்கள் இடைக்கால நிவாரணம் பெறும் தகுதியை இழப்பர் என்பதனால் பெரும் எண்ணிக்கையானவர்களை உள்ளீர்ப்பதற்கு இது மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலைமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்றது. அங்கு மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அதில் மரணத்துக்கான காரணியாக காணாமல் போனது குறிப்பிடப்பட்டுள்ளது.

2.24 2019 ஒக்ரோபரில் அமைச்சரவை கா.ஆ.அ இனால் வரையப்பட்ட பிரேரணையை ஏற்றுக்கொண்டதுடன் நிதி அமைச்சரும் தே.ஒ.ந. அமைச்சும் அதனை ஓர் இணைந்த அமைச்சரவைப் பத்திரமாக சமர்ப்பித்தனர். அதில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட தமது அன்பிற்குரியவர்கள் சார்பில் மரணச் சான்றிதழ் பெற்ற குடும்பங்களும் இடைக்கால நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் என்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின்

[21] 2016 இல 16 மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் பிரிவு 8அ-8எ

குடும்பங்கள் பெரும் எண்ணிக்கையில் இடைக்கால நிவாரணம்பெறும் வசதியை இது திறம்பட வழங்கியது.

2.25 செல்லுபடியாகும் கா.சா. பெற்றிருந்தவர்களுக்கு 2019இன் இறுதிக் காலண்டுக்குள் தே.ஒ.ந.அ கொடுப்பனவு வழங்க ஆரம்பித்தது. விண்ணப்பதாரர்கள் வழங்கிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு கா.ஆ. அலுவலகமும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களமும் துணைநல்கின. இடைக்கால நிவாரணக் கொடுப்பனவு அமைச்சினால் வழங்கப்பட்டதையடுத்து 2019 நவம்பர் மாதத்துக்குள்[22] ரூபா.7 மில்லியன் கொண்ட கொடுப்பனவை தே.ஒ.ந.அ 153 குடும்பங்களுக்கு நேரடியாக வழங்கியது.

2.26 2019 நவம்பர் மாதத்தில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து இவ்விடயம் நீதி அமைச்சுக்கு மாற்றம் செய்யப்பட்டது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்தும் இடைக்கால நிவாரணத்தை வழங்குவதற்கு கா.ஆ.அ அரச அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

கொவிட்-19 நிவாரணம்

2.27 இலங்கை மக்களை மிகக்கடுமையாக நலிவடையச் செய்த இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு குறிப்பாக காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களைக் கருத்திற்கொண்டு கொவிட் நிவாரண நடவடிக்கைகளின் போது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நிலைமைகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்ற சிபாரிசு மடல் ஒன்றை அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு கா.ஆ.அ அனுப்பியது.

2.28 கா.ஆ.அ இன் அவதானமாக 2020 மார்ச் 6 ஆந் திகதிய இல 2168/8 வர்த்தமானியில் இதற்கான ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டு அச்செயலணிக்குரிய குறிப்பிட்ட ஒரு கடப்பாடாக பந்தி 11 இல் "மகளிர், குறைவருமானமுடைய குடும்பங்கள், வெளிப்படையாகவே இடர்நிலையில் உள்ள ஆட்கள் போன்றோரை இச்செயற்பாட்டின்போது கவனத்திற்கொள்ள வேண்டும்"[23] என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

2.29 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுள் மிகுந்த நலிவுற்றவர்களாக முதியவர்களும் பெண் தலைமைக் குடும்பங்களுமே இருக்கின்றன. குடும்ப உறுப்பினர் ஒருவர் குடும்பத்துக்கு அன்றாடம் ஈட்டித்தருகின்ற வருமானத்திலேயே அவர்கள் வாழுகின்றனர். நாட்டில் நிலவும் இந்த நிலைமையானது இக்குடும்பங்களுக்கு மோசமான விளைவுகளைக் கொண்டு

[22] கா.ஆ.அ இற்கு அமைச்சின் மூலம் 11 நவம்பர் 2019 இல் வழங்கப்பட்ட கடிதத்தின்படி.
[23] இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி, விசேடமானது, இல. 2168/8, (26 மார்ச்சு 2020)

வந்துள்ளது. ஏனெனில் தமது வாழவாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாதவர்களாகவும் மட்டுப்பட்ட சொத்துகளைக் கொண்டவர்களாகவும் அல்லது சொத்துகள் அற்றவர்களாகவுமே உள்ளனர் என்பதை கா.ஆ.அ அவதானித்துள்ளது.

2.30 தற்போதைய நெருக்கடி நிலைக்கு நிவாரணம் வழங்கும் எந்த உத்தேச நடவடிக்கையிலும் இந்த காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அது உனவு வழங்குவதாகவோ அல்லது பொருளாதார உதவி வழங்குவதாகவோ இருந்தாலும் அதில் உள்வாங்கப்பட வேண்டும் என்று கா.ஆ.அ பரிந்துரைத்துள்ளது.

2.31 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு குறுகிய கால நடவடிக்கையாக கிராம அலுவலர்கள் மூலமாக உலர் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும் என்று கா.ஆ.அ சிபாரிசு செய்தது. கிராம அலுவலர்கள் ஏற்கனவே தமது பகுதிகளிலுள்ள காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் பட்டியலைச் சேகரித்துள்ளனர். அந்தப் பட்டியலை வைத்து நலிவுற்றோருக்கான வேறு ஏதேனும் அரசின் உதவித் திட்டத்தில் அக்குடும்பங்கள் பயனாளிகளாக இருந்தால் மோசடி நடப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

சட்ட ஆலோசனையும் ஆதரவும்

2.32 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் படையினரின் குடும்பங்களிலிருந்தும் உதவிகோரி வருகின்ற மனுக்களை தொடர்ச்சியாக கா.ஆ.அ பெற்றுக்கொண்டு வருகின்றது. அதில் அரச சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கும் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கா.சா. பெற்றுக்கொள்வதற்கும் உதவிகள் கோரப்படுவதுடன் தற்போதுள்ள வழக்கு விவகாரங்கள், சொத்துப் பிணக்குகள், உரித்துடைமை மற்றும் பின்னுரித்து போன்ற விடயங்களும் கோரப்பட்டுள்ளன. இழப்பீடுகளுக்கான அலுவலகம் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் உள்ளூராட்சி நிறுவனங்கள் படையினர் போன்ற சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் கா.ஆ.அ தொடர்புகளை ஏற்படுத்தி இவ்விடயங்களை தீர்த்துள்ளது. சட்ட ஆலோசனை வழங்கியும் நடைமுறை வழிகாட்டல்கள் வழங்கியும் சாத்தியமான சந்தர்ப்பங்களில் பரிந்துரைகளை வழங்கியும் கா.ஆ.அ துணைபுரிந்துள்ளது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மூலமாகப் பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கி, சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர்கள் போன்றோர் ஊடாக தனிப்பட்ட

முறைப்பாடுகளுக்கான கா.சா அல்லது ம.சா பெற்றுக்கொள்வதற்கு கா.ஆ.அ துணைபுரிந்துள்ளது.

மனித எச்சங்களை விசாரிப்பதற்கு நீதிசார் தத்துவங்களைப் பிரயோகித்தல்

2.33 கா.ஆ.அ சட்டத்தின் பிரிவு 12(ஈ) இன்படி அகழ்வுகளுக்கும் சந்தேகத்துக்குரிய புதைகுழிகளைத் தோண்டுவதற்கும் உரிய நீதிமன்ற உத்தரவு கோரி நீதிவான் நீதிமன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் அத்தகைய அகழ்வுகள் தோண்டுதல்களின்போது கண்காணிப்பாளராக செயற்படுவதற்கும் இவற்றுடன் தொடர்புபட்ட வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் கா.ஆ.அ இற்கு அதிகாரம் உண்டு. சந்தேகத்துக்குரிய புதைகுழிகள் பற்றிய விசாரணைகளின் போது கண்காணிப்பாளராக செயற்படும் அதிகாரத்தைப் பயன்படுத்துகையில்,[24] 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின்படி மனித எச்சங்களின் மீதான விசாரணைகளை நடத்துவதற்குரிய அதிகாரங்கள் நேர்த்தியாகப் பிரயோகிக்கப்படுவதில்லை என்பது கா.ஆ.அ இன் அவதானமாகும். இதன் விளைவாக வெற்றிகரமான முறையில் முடிவை எட்டுவதற்கு ஏதுவாக்கும் வகையிலான ஒழுங்கமைந்த நியமமான முறைப்படி மனித எச்சங்களின் மீதான நீதிசார் விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. இவ்விடயங்களை அவதானித்து நீதி சேவைகள் ஆணைக்குழுவின்[25] கவனத்துக்குக் கொண்டு செல்லும் பரிந்துரைப்புகளை கா.ஆ.அ சமர்ப்பித்தது.

2.34 சந்தேகத்துக்குரிய புதைகுழிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் புலன் விசாரணைகள் தனித்துவமான சவால்களைக் கொண்டுள்ளதுடன் சாதாரண குற்றவியல் மற்றும் தடயவியல் புலன் விசாரணைகளை மேற்கொள்ளும் பணியாளர்களைவிட தனித்தன்மை கொண்ட புலன் விசாரணை அணுமுறைகளைக் கொணட பணியாளர்களே அவசியப்படுகின்றனர். சாதாரணமான குற்றவியல் புலன் விசாரணையின்போது மனித எச்சங்களின் மூலம் இறந்தவரின் எண்பு, தசை போன்றவையே கண்டறியப்படுகின்றன என்பதுடன் ஏனைய தடயங்களான சொந்தப் பொருட்கள் (ஆடை அணிகலன்கள் போன்றன) இருந்தவாறே இருக்கும். உடலில் காணப்படும் அவ்வாறான எண்பு, தசை மற்றும் ஏனைய தொல்லியற் சான்றுகள் போன்றன இறப்பு சம்பவித்ததற்கான காரணத்தை நிரூபிப்பதுடன் உடலை அடையாளம் காண்பது சிக்கலான விடயமாகவும் இருக்கும்.

2.35 சந்தேகத்துக்குரிய புதைகுழிகளை ஆராயும் சந்தரப்பங்களின் போது மனித எச்சங்கள் பலதரப்பட்ட முறையில் அழுகிய நிலையிலோ உக்கிய நிலையிலோ

[24] கா.ஆ.அ பின்வரும் வழக்குகளில் கண்காணிப்பாளராக செயற்பட்டது. மன்னார் நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. B232/18 மற்றும் வழக்கு இல. B768/13; முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. AR/808/19 மற்றும் வழக்கு இல. AR/503/20; கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. B/542/20. மேலதிக தகவல்களுக்கு பார்க்க. பந்தி 3.5

[25] திரு. சாலிய பீரிஸ், பிரதம நீதியரசரின் தவிசாளர், தவிசாளர் நீதி சேவைகள் ஆணைக்குழு (29 செப்ரம்பர் 2020) கடிதம்

காணப்படும். இறப்பு நிகழும் போதோ அதற்குப் பின்னரோ ஏற்பட்ட அதிர்ச்சியின் அடையாளங்களுடன் எலும்புக் கூடுகள் பகுதியளவிலோ முற்றாகவோ சிதைந்து காணப்படும். மேலும் சாதாரண குற்றவியல் புலன் விசாரணைகளைப் போலன்றி மனித எச்சங்களின் தன்மை மிகுந்த உச்சபட்சத் தன்மை வாய்ந்தது. சந்தேகத்துக்குரிய புதைகுழி சம்பந்தமான இல. B232/18 வழக்கின் படி 150 இற்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் மன்னார் ச.தொ.ச கட்டிடத்தில் அகழப்பட்டன.

2.36 சந்தேகத்துக்குரிய புதைகுழியொன்றின் வெற்றிகரமான புலன் விசாரணை இறப்புக்கான காரணியை நிரூபிப்பதிலும் இறந்த உடலை அடையாளம் காண்பதிலுமே உள்ளது. இறந்த உடலை அடையாளம் காண்பதிலுள்ள சவால்கள் சந்தேகத்துக்குரிய புதைகுழிகள் பற்றிய புலன் விசாரணையை சாதாரண குற்றவியல் புலன் விசாரணையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. சுந்தேகத்துக்குரிய புதைகுழிகள் பற்றிய புலன் விசாரணைச் செயன்முறை விஞ்ஞானபூர்வமான மற்றும் விஞ்ஞானபூர்வமற்ற இரு முறைமைகளையும் அவசியப்படுத்தும். விஞ்ஞானபூர்வமற்ற முறைமைகள் என்பது உள்ளூர் பகுதியின் கடந்த காலத்தை நிரூபிப்பதையும் உள்ளூரின் மரணச் சடங்குகள் பற்றி அடையாளம் காண்பதையும் குறிக்கும். விஞ்ஞானபூர்வமான முறைமைகள் என்பது உடற்கூற்றுத் தடயம், தொல்லியற் தடயம், மானுடவியற் தடவியம், பற்கள்சார் தடயம் போன்ற பல்துறை ஆராய்ச்சிகளைக் கொண்டமைந்தது.

2.37 ஒரு பகுதியில் அகழப்பட்ட உடலங்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து மனித எச்சங்களும் அதன்பாற்பட்ட புதைகுழி ஆராய்ச்சி முடிபுகளும் குடும்பங்கள் வழங்கிய தகவல்களுடன் இயைபுற வேண்டும். குறிப்பாக காணாமலாக்கப்பட்ட சூழ்நிலை குறித்தும் ஆள்பற்றியும் உடல்வாகு பற்றியும் மருத்துவ மற்றும் பற்கள்சார் தகவல்கள் பற்றியும் (மரணத்திற்கு முன்னரான தரவுகள்) காணாமலாக்கப்பட்டவர் சார்பில் குடும்பங்கள் வழங்கிய தகவல்கள் அகழ்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளுடன் இணங்க வேண்டும்.

2.38 மேற்குறித்த தொல்லியல், மானுடவியல் தகவல்கள் ஒன்றுக்கொன்று தனித்தனியாக ஆராயப்பட்டு விளக்கப்பட்டு இணக்கம் காணப்பட வேண்டும். அதுவே புதைகுழியின் கால எல்லை மற்றும் இறந்தவரின் இறப்புக்கான காரணி போன்றவை பற்றிய முடிவை எட்டுவதற்கு அவசியப்படும்.

2.39 எனவே மனித எச்சங்கள் பற்றிய புலன் விசாரணையின் போது மிகுந்த கவனத்துடன் முடிவுகள் சேகரிக்கப்படுவதும் கையாளப்படுவதும் கொண்டு செல்லப்படுவதும் பாதுகாக்கப்படுவதும் ஆராயப்படுவதும் இன்றியமையாதது. எந்த வகையான நடவடிக்கைகளின்போதும் முடிவுகளை முறையற்ற விதத்தில் கையாளுவது பிழையான வியாக்கியானத்தை வழங்கிவிடுவதுடன் இறப்புக்கான காரணியை நிரூபிப்பதையும் உடலங்கள் அடையாளம் காணப்படுவதையும்

தடுக்கின்றது. மேலும் புலன் விசாரணையில் ஒரு குற்றம் புரியப்பட்டது தெரியவரும்போது முறையற்ற விதத்தில் கையாளப்பட்ட முடிவுகளை அடுத்தடுத்த குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் பிரயோகிக்க முடியாமற் போகலாம் என்பதுடன் அது நீதிபரிபாலனத்தின் செயற்றிறனைக் குறைத்து மதிப்பிடும் சாத்தியத்தையும் தோற்றுவிக்கும்.

2.40 மனித எச்சங்களின் மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றவியல் நடைமுறைக் கோவையின்படி நீதிவான்களுக்கு பரந்துபட்ட அதிகாரங்கள் உள்ளன. குற்றவியல் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் XXX இன்படி மனித எச்சங்கள் மீதான விசாரணையை மேற்கொள்ளவும் இறப்பிற்கான காரணியை நிரூபிக்கவும் ஒரு நீதிவானுக்கு அதிகாரமுண்டு. அவ்வாறு செய்யும் வேளையில் பிரிவு 370(5) இன்படி யாராவது சாட்சியை சமுகளிக்குமாறு நீதிவான் நிர்ப்பந்திக்க முடியும் என்பதுடன் அரச வைத்திய அதிகாரியை வரவழைத்து இறந்த உடலத்தை அல்லது மனித எச்சத்தினைப் பரிசோதனை செய்யுமாறும் அறிக்கை சமரப்பிக்குமாறும் பிரிவு 373(1) இன்படி கோர முடியும்.

2.41 மேலதிகமாக குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 9 இன்படி இறந்த உடலங்கள் தொடர்பிலான விசாரணை மேற்கொள்ளும் அதிகாரம் நீதிவானுக்கு உண்டு. ஒரு விசாரணைக்குத் துணை புரிவதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 124 இன்படி ஒரு நீதிவான் பொருத்தமான ஆணைகளைப் பிறப்பிக்கலாம். மேலும் அரச பகுப்பாய்வுத் திணைக்களம், விசாரணைக்குட்பட்ட ஆவணங்களுக்கான அரச பரீட்சகர், விரற்தடயப் பதிவாளர் அல்லது அரச வைத்திய அதிகாரி போன்றோரின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறுவதற்கு பிரிவு 116(3) இன்படி ஒரு நீதிவான் ஆணை வழங்கலாம்.

2.42 சான்றுகளைப் பொருத்தமான முறையில் கையாள்வதை உறுதிப்படுத்தும் திட்டவட்டமான அதிகாரங்களை ஒரு நீதிவான் கொண்டிருக்கின்றார். குற்றவியல் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் XXX பிரிவு 372(1) இன்படி விசாரணையின்போது பெறப்பட்ட சான்றுகளையும் நீதிவானின் முடிவுகளையும் பதிவு செய்ய வேண்டியது நீதிவானின் பொறுப்பாகும். குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 115 இன்படி புலன் விசாரணையின்போது ஏதேனும் ஆயுதமோ ஆவணமோ அல்லது மாதிரியோ பெறப்பட்டால் அவை நீதிவானுக்கு முன்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் 1961 ஆம் ஆண்டின் இல. 3 சாட்சிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளான 60 மற்றும் 165 இன்படி வாய்மொழிச் சாட்சியத்தில் ஏதேனும் பொருள் பற்றிக் குறிப்பிடப்படுமிடத்து அத்தகைய பொருளைப் பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கோரலாம்.

2.43 ஒவ்வொரு வழக்கு நடவடிக்கையின் போதும் விசாரணைகளை நடத்துவதற்கு குற்றவியல் நடைமுறைக் கோவையின்படி நீதிவானுக்கு அளிக்கப்பட்டுள்ள

விசாரணை அதிகாரங்கள் நேர்த்தியான முறையில் பிரயோகிக்கப்படவில்லை என்பதை கா.ஆ.அ அவதானித்துள்ளது; அவதானித்துக் கொண்டும் வருகின்றது.

2.44 இந்நேர்த்தியற்ற அணுகுமுறைகள் அத்தகைய இடங்களிலிருந்து பெறப்பட்ட சான்றுகளின் சங்கிலியைப் பகுப்பதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் முடிவுகளை எட்டுவதற்கும் உரிய செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதில் சவால்களைத் தோற்றுவித்துள்ளன. மேலும் மனித எச்சங்கள் மீதான விசாரணைகளுக்கு பல்துறைசார்ந்த அணுகுமுறைகள் தொடர்ச்சியான ஒழுங்கில் ஈட்டப்படுவதில்லை என்பதனால் விசாரணைகளை மேம்படுத்தி முடிவுகளை வைத்து கருதுகோள்களை முறியடிப்பது கவனிக்கப்படாமல் உள்ளது. இது வெற்றிகரமான முடிவை எட்டுவதைத் தடுக்கின்றது என்பது கா.ஆ.அ இன் அவதானமாகும்.

2.45 சான்றுகளின் தொகுப்பை உறுதிப்படுத்துவதில் பின்வரும் சவால்களை கா.ஆ.அ அவதானித்துள்ளது:

அ. *விசாரணைத் தளத்திலிருந்து மீளல்:* மனித எச்சங்கள், தொல்லியல் மற்றும் மானுடவியல் முடிவுகள் உட்பட அனைத்து சான்றுகளும் சூழ்நிலை ஆவணவாக்கம் செய்யப்பட வேண்டும்; பொருத்தமான முறைமையைக் கொண்டு அகழப்பட வேண்டும்; துப்பரவு செய்யப்பட்டு பொதியிட்டு முத்திரையிடப்பட வேண்டும். ஒருங்கமைந்த பண்டமாகப் பகுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று குறிக்கப்பட வேண்டும்.

i. *சூழ்நிலை ஆவணவாக்கம்:* அகழ்வுக்கு முன்னர் அந்த இடத்தின் அமைப்பு, அமைவிடம், போன்றவற்றைப் பதிவிட்ட புகைப்படங்கள் உட்பட அனைத்துச் சான்றுகளும் சூழ்நிலை ஆவணவாக்கம் செய்யப்பட வேண்டும். அது துல்லியமான வியாக்கியானத்தை உறுதிப்படுத்தும்.

ii. *சேகரிப்பு முறைமை:* அகழ்வுக்கு பொருத்தமான முறைமை பிரயோகிக்கப்பட வேண்டும். மனித எச்சங்களை அகழ்வதற்குக் கனரக இயந்திரங்கள் உபயோகிக்கப்படும் போது அவை சேதத்தை உண்டாக்குவதுடன் முடிவகள் மாறுபடுவதையோ அல்லது இழக்கப்படுவதையோ தோற்றுவிக்கும்.

iii. *துப்பரவு செய்தலும் பொதியிடலும் முத்திரையிடலும்:* சான்றுகளை ஏற்றிச் செல்வதற்கு முன்னர் துப்பரவு செய்து பொதி செய்வதற்கான பொருத்தமான முறைமைகள் பிரயோகிக்கப்படுவது அவசியப்படுகின்றது. ஏனெனில் அவை சேதமடையக் கூடாது. அல்லாவிட்டால் முடிவுகள் மாற்றமுறும் அல்லது இழக்கப்படும்.

iv. *ஒருங்கமைந்த பண்டமாக்கல்:* பெறப்பட்ட ஒவ்வொரு பாகமும் ஒருங்கமைந்த பண்டமாகப் பகுக்கப்படுவது அவசியமாகும்.

v. *சமர்ப்பிக்கப்படும் குறிப்பீடு:* கண்டுபிடிக்கப்பட்ட மண், ஆடைகள், ஆயுதங்கள் போன்றன சமர்ப்பிக்கப்பட வேண்டியவை என்று குறிப்பிடப்படல் அவசியமாகும். அவற்றின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான ஆணை வழங்கப்படாமலும் அதனைச் செய்யலாம்.

ஆ. *களஞ்சியப்படுத்தல்:* முடிவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான நேர்த்தியற்ற அணுகுமுறைகளையே கா.ஆ.அ அவதானித்துள்ளது. முடிவுகள் நீதிமன்றங்கள் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸ் போன்ற பல்வேறுபட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலேயே களஞ்சியப்படுத்தப்படுபகின்றன. சான்றுகளைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பொறுப்பான பலதரப்பட்ட அதிகாரிகளும் பலதரப்பட்ட செயற்பாடுகளையும் நியமங்களையும் சான்றுகளின் தொகுப்பை உறுதிப்படுத்துவதற்குப் பிரயோகிக்கின்றனர். நீண்ட காலமாக, ஒரு வழக்கு தொடுக்கப்பட்டால் அங்கு உறுதிப்படுத்துவதற்கான எந்த செயன்முறையும் இடப்படவில்லை. அதாவது சந்தேகத்துக்கிடமான புதைகுழிகளிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் மீண்டும் அந்த வழக்கு எடுபடும்போது அச்சான்றை மீண்டும் அணுகுவதற்கேற்ற வகையில் அவை களஞ்சியப்படுத்தப்படவில்லை.

இ. *அணுகுதல்:* விசாரணைகளின் போது பெறப்பட்ட அனைத்து முடிவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன, வியாக்கியானம் செய்யப்பட்டன, மற்றும் ஒன்றுக்கொன்று இயைபுற்றன என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சட்ட வைத்திய அதிகாரியோ அல்லது ஒரு தொல்லியலாளரோ விசாரணையின் போது எல்லா சான்றுகளும் நேரத்துக்கு அணுகக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளனவா என்று ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி ஆணை பிறப்பிப்பது முக்கிமானதாக இருக்கின்றது. இருப்பினும் சான்றுகள் பலதரப்பட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதன் காரணமாக சான்றுகளை அணுகுவதனை உறுதிப்படுத்துவதிலும் அவற்றின் பகுப்பாய்வுகளையும் வியாக்கியானங்களையும் தடை செய்வதிலும் விசாரணைகளில் வெற்றிகரமான முடிபுகளை எட்டுவதற்கும் கா.ஆ.அ. மிக நீண்ட தாமதத்தை அவதானித்துள்ளது.

ஈ. *நீதிவான்களுக்கும் நீதிமன்ற ஊழியர்களுக்கும் மத்தியில் சான்றுகளின் தொகுப்புகள் சார்ந்த செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதை உறுதிப்படுத்தல்:* நீதிவான்களும் நீதிமன்ற ஊழியர்களும் பல்வேறுபட்ட நியாயாதிக்கங்களுக்குட்பட்டு செயற்பட்டுக் கொண்டிருப்பதன் காரணமாக அடுத்தடுத்து வரக்கூடிய நீதிவான்கள் முந்தைய நீதிவானின் சான்றுகளின் தொகுப்புசார் விவகாரங்களை ஏற்று செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதில் சவால்கள் இருந்து வருகின்றன. இது ஒரு விசாரணைக்குத் தலைமை வகித்த

நீதிவான் ஒருவர் பின்பு எதுவித காரணங்களையும் குறிப்பிட்டுக் காட்டாது அந்தச் சான்று விசாரணையின் ஆரம்பகட்டத்திலேயே கையாளப்பட்டது என்னும் வகையில் பொறுப்பை ஏற்க மறுக்கும் நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது.

2.46 மேற்குறித்துக் காட்டியவைகளின்படி எலும்புக் கூடுகளுடன் காணப்படும் மனித எச்சங்கள் பற்றிய விசாரணை விஞ்ஞானபூர்வமற்ற மற்றும் விஞ்ஞானபூர்வமான முறைமைகளின் பிரயோகத்தை வேண்டி நிற்கின்றது. எனவே சட்ட வைத்திய அதிகாரிக்கும் மேலாக தொல்லியற் தடயம், பற்கள்சார் தடயம், பொலிஸ் மற்றும் குற்றச்சம்பவம் குறித்த பொலிஸ் அதிகாரிகள் போன்ற பல்துறை நிபுணர்களின் பகுப்பாய்வுகள் அந்தச் சான்றுகளின் வியாக்கியானத்தைத் தெரிவித்தல் முக்கியமானதாகும்.

2.47 முடிவுகளுக்கு வியாக்கியானம் வழங்குவதற்கோ அல்லது விசாரணையின் மூலம் பெறப்பட்ட முடிவைத் தீர்மானிப்பதற்கோ ஒரு நீதிவான் ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர் சான்றுகள் தொடர்பிலான எல்லாக் கருதுகோள்களும் கருத்திற்கொள்ளப்பட்டு இணக்கம் கண்டுள்ளன என்று உறுதிப்படுத்தும் பல்துறை நிபுணர்களின் அறிக்கைகளை அவர் பெற்று அவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

2.48 பற்பல பங்குதாரர்களும் விசாரணைகள் நடைபெறுவது பற்றித் தெரிவிக்கும் கருத்துகளை உறுதிப்படுத்துவதற்கு நீதிவான் பங்குதாரர்களை ஒன்றுகூட்டும் விசாரணைக்குழுக் கூட்டங்களில் காலத்துக்குக் காலம் கா.ஆ.அ சிபாரிசு செய்துள்ளதுடன் பங்குபற்றியும் உள்ளது.

2.49 மேற்குறித்துக் காட்டிய காரணங்களுக்காக நீதிவான் நீதிமன்றங்களுக்கு வழிகாட்டுதல் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கா.ஆ.அ நீதி சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கனிவான கோரிக்கை விடுத்தது. அதாவது மனித எச்சங்கள் பற்றிய விசாரணையை நடத்துவதற்கான அதிகாரங்கள் ஒழுங்கு முறையாகவும் நேர்த்தியாகவும் செயற்படுத்தப்படுவது சான்றுகளின் தொகுப்பு பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் என்பதுடன் விசாரணைகளுக்கு பல்துறை அணுகுமுறைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுமாகும்.

2.50 கா.ஆ.அ இன் கனிவான வேண்டுகோளுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கொண்டிருக்க வேண்டியவை:

அ. விசாரணைக்குரிய இடத்தில் எட்டப்பட்ட முடிவுகளை ஆவணப்படுத்தும் செயன்முறை;

ஆ. விசாரணைக்குரிய இடத்திலிருந்து முடிவுகளை ஈட்டிக்கொள்ளும் வழிமுறை;

இ. முடிவுகள் எட்டப்பட்ட உடனே அவற்றைத் துப்பரவு செய்து பொதி செய்து முத்திரையிடும் முறைமை;

ஈ. பெறப்பட்ட அனைத்து முடிவுகளையும் ஒருங்கமைந்த பண்டமாக்கும் முறைமை;

உ. பெறப்பட்ட முடிவுகளை சமர்ப்பிக்கப்பட வேண்டியவை என்று குறிப்பீடு செய்யும் முறைமை.

2.51 சான்றுகளைக் கையாளும் சந்தரப்பத்தில் குற்றச் சம்பவம் குறித்த பொலிஸ் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரிகள், தொல்லியலாளர்கள் மற்றும் அரச பகுப்பாய்வுத் திணைக்களம் போன்ற பல்வேறு அதிகாரிகளின் வகிபாகம் பற்றி அச்சுற்றறிக்கை கருத்திற்கொள்ள வேண்டும் என்பது கா.ஆ.அ கனிவாக வேண்டிய கோரிக்கையாகும்.

2.52 கா.ஆ.அ கோரிய அத்தகைய சுற்றறிக்கை சான்றுகளைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பொறுப்புடைய பல்வேறுபட்ட அதிகாரிகளிடையே ஒழுங்கமைந்த நியமமான செயன்முறையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளைக் கொண்டதாகவும் சான்றுகளின் தொகுப்பை உறுதிப்படுத்தும் அச்செயன்முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேளைக்கு அணுகக்கூடியதை உறுதிப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். அது அவர்கள் அச்சான்றைப் பகுப்பாய்வு செய்து நீதிமன்றுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் துணைபுரியும்.

2.53 கா.ஆ.அ மேலும் கோரிய அத்தகைய சுற்றறிக்கை அனைத்து நீதிவான்களும் நீதிமன்ற ஊழியர்களும் சான்றுகளின் தொகுப்புகள் ஒழுங்கமைந்த அணுகுமுறையில் அடுத்தடுத்து வரும் நீதிவான்களால் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

2.54 கா.ஆ.அ மேலும் கோரிய அத்தகைய சுற்றறிக்கை கொண்டிருக்க வேண்டிய அம்சமாக அனைத்து நீதிவான்களும் தேவைப்படும் பட்சத்தில் பல்துறைத் தடயவியல் அடங்கலாக விஞ்ஞானபூர்வமான மற்றும் விஞ்ஞானபூர்வமற்ற முறைமைகளைப் பயன்படுத்தி சான்றுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

3. விசாரணைகள்

3.1 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரைத் தேடிக் கண்டறிந்து அவர்கள் காணாமல் போனமைக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்தும் பொறிமுறையை வழங்கவேண்டிய கடப்பாடு கா.ஆ.அ இற்கு உண்டு[26]. கா.ஆ.அ இற்கான விசாரணை அதிகாரங்கள் உள்ளடக்குவது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலும் மனித

[26] கா.ஆ.அ சட்டம், பிரிவு 2(அ), 10(1)(அ).

எச்சங்களை அகழ்ந்து தோண்டி எடுக்கும் செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு நீதிவான் நீதிமன்றுக்கு விண்ணப்பிப்பதும் ஆகும். மனித எச்சங்களைக் கையாளுவது தொடர்பிலான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அதிகாரமும் கா.ஆ.அ இற்கு உண்டு. தனிப்பட்ட விசாரணைகளை மேம்படுத்துவதையும் மனித எச்சங்கள் மற்றும் சந்தேகத்துக்குரிய புதைகுழிகள் பற்றிய நீதிமன்ற விசாரணைகளைக் கண்காணிப்பதையும் கா.ஆ.அ தொடர்ந்து வருகின்றது.

3.2 பல்வேறுபட்ட தரப்புகளிலிருந்தும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பில் வருகின்ற தகவல்களையும் முறைப்பாடுகளையும் பெற்றுக்கொள்வதை கா.ஆ.அ தொடர்கின்றது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவை அவற்றுள் அடங்கும். காணாமல் போன வழிகள் சூழ்நிலைகள் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்யும் செயன்முறையை கா.ஆ.அ தொடர்ந்து வருகின்றது. குறிப்பாக கா.ஆ.அ சட்டத்தின் பிரிவு 12 (ஆ) (ii) மற்றும் (iii) இன்படி கணிசமான அளவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மற்றும் பொது மக்களின் கவனத்தைப் பெற்றுள்ள நிகழ்வுகள் தொடர்பிலேயே அவை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

3.3 குடும்பங்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளையும் கா.ஆ.அ பின்தொடர்ந்தும் அவதானித்தும் வருகின்றது.

அடையாளம் காணப்படாத மனித எச்சங்களைக் கண்டுபிடித்தல்

3.4 விசாரணை அதிகாரங்களின்படி மனித எச்சங்களை அகழ்ந்து தோண்டி எடுக்கும் செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு நீதிவான் நீதிமன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் அது தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளில் பங்கேற்பதற்குமான அதிகாரத்தை கா.ஆ.அ கொண்டுள்ளது.[27] மனித எச்சங்களைக் கையாள்வது தொடர்பிலான பரிந்துரைப்புகளை அரச அதிகாரிகளுக்கு வழங்குவதற்கும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களது உரிமைகளையும் அவர்களது குடும்பங்களது உரிமைகளையும் பாதுகாப்பதற்கும்[28] குறித்தொதுக்கப்பட்ட அதிகாரம் கா.ஆ.அ அற்கு உண்டு.

3.5 மனித எச்சங்கள் பற்றிய நீதிமன்ற நடவடிக்கைகளில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பின்வரும் ஐந்து வழக்குகளில் கா.ஆ.அ கண்காணிப்பாளராகச் செயற்பட்டுள்ளது: மன்னார் நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. B232/18 மற்றும் வழக்கு இல. B768/13; முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. AR/808/19 மற்றும் வழக்கு இல. AR/503/20; கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. B/542/20. களுவாஞ்சிகுடி

[27] கா.ஆ.அ சட்டம், பிரிவு 12(ஈ).
[28] கா.ஆ.அ சட்டம், பிரிவு 13(1)(ஓ)(iii), 10(இ).

நீதிவான் நீதிமன்றத்திலுள்ள வழக்கு இல. B172/14 என்ற வழக்கிலும் கா.ஆ.அ தலையிட்டுள்ளது.

3.6 ஒவ்வொரு வழக்கிலும் தொல்லியற் தடயம் மற்றும் மானுடவியற் தடயம் போன்றவற்றின் அடிப்படையிலான சான்றுகளை உள்ளடக்கி மனித எச்சங்கள் மீது பகுப்பாய்வை மேற்கொள்ளும் பல்துறைசார் அணுகுமுறை விசாரணைகளில் உள்வாங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைப்பை கா.ஆ.அ வழங்கியது. மேலும் அந்த விசாரணை நடவடிக்கைகளில் குறித்த இடத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளை நிரூபிக்கும் உள்ளூர் பற்றிய கடந்தகாலத் தகவல்கள் பெறப்பட்டு அது பூரணம்காண வேண்டும். விசாரணைகளின் போது பெறப்பட்ட அனைத்துச் சான்றுகளின் தொகுப்புகளையும் பாதுகாப்பதற்கான பொருத்தமான படிமுறைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன் பொலிஸ், குற்றச் சம்பவம் குறித்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி போன்ற விசாரணைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களுடைய முடிவுகளும் நீதிவானிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் அவை பதிவு செய்யப்படவும் வேண்டும் என்பதை கா.ஆ.அ மேலும் பரிந்துரைத்தது.

3.7 வழக்கு இல. B232/18 மன்னார் நகரிலுள்ள ச.தொ.ச கட்டிடத்தில் காணப்பட்ட சந்தேகத்துக்கிடமான புதைகுழி சம்பந்தமான புலன் விசாரணையுடன் தொடர்புபட்டது. 2020 மார்ச்சு மாதம் 10 ஆந் திகதி அதனுடன் தொடர்புபட்டு குடும்பங்களின் உரிமைகள் சட்டத்தரணிகள் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும் என்ற கேள்வியுடன் சட்டமா அதிபருக்கு ஆட்சேபனைகள் கற்றறிந்த சட்டத்தரணியினால் எழுப்பப்பட்டன. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரான மனுதாரர்களுக்கு வழக்கு இல. B232/18 இற்குத் தோற்றுவதற்கான ஆதாரங்கள் இல்லை என்று மன்னார் நீதிவான் ஆணையிட்டார்.

3.8 2020 மார்ச்சு மாதம் 13 ஆந் திகதி வழக்கு இல. B232/18 இல் தமது சட்டத்தரணியுடன் தோற்றிய மூன்று குடும்பங்களைச் சேர்ந்தோர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இதனை மீள் விசாரணைக்காக விண்ணப்பித்ததுடன் கா.ஆ.அ இனை 2 ஆம் பிரதிவாதியாகக் குறிப்பிட்டிருந்தனர். கா.ஆ.அ இதற்கான மறுப்பைச் சமர்ப்பித்ததுடன் கொள்கையளவில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உரிமைகளுக்காக ஆதரவு வழங்கி அவர்கள் மனித எச்சங்கள் மீதான நீதிமன்ற விசாரணையை முன்னெடுப்பதற்கு சட்டத்தரணிகளுடன் தோற்றும்போது அதில் பங்குபற்றியது. மீள்விசாரணை மனுவுக்கான வாய்மூல வாதங்கள் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதிக்கு விடப்பட்டுள்ளன.

4. தரவுத்தளம்

4.1 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தரவுகளைப் பகுப்பதற்கும் தகவல்களடங்கிய தரவுத்தளமொன்றை நிறுவுவதற்கும் கா.ஆ.அ அதிகாரம் பெற்றுள்ளது[29]. பல்வேறு தரப்புகளின் மூலமாகவும் பெற்றுக்கொண்ட தகவல்களை உறுதிசெய்து தரவுத்தளத்தில் பதிவேற்றும் செயற்பாட்டை கா.ஆ.அ தொடர்ந்து வந்துள்ளது. ஏக காலத்தில் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின்[30] உறவினர்களுடன் தொடர்பாடியுள்ள கா.ஆ.அ தமது அன்புக்குரியவர்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றமையை அவர்களிடம் தெரிவித்தது. மேலும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை வெளியிட்டு, முதன்முறையாக காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் பகுப்பு செய்யப்பட்ட தகவல்களை கா.ஆ.அ பகிரங்கமாக வெளியிட்டது[30].

காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய கையிருப்புத் தகவல்களைத் தொகுத்தல்

4.2 கா.ஆ.அ சட்டத்தின் பிரிவு 10(1)(உ) இன்படி காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக ஏற்கனவே அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழு மற்றும் விசாரணைக்கான ஜனாதிபதி ஆணைக்குழு போன்றவை மூலம் பெறப்பட்ட அனைத்துக் கையிருப்புத் தரவுகளையும் ஒருமுகப்படுத்துவதற்கு அவற்றைத் தொகுக்க வேண்டிய கடப்பாடு வெளிப்படையாகவே கா.ஆ.அ இற்கு உண்டு.

4.3 கா.ஆ.அ நிறுவப்பட்டதிலிருந்து முப்படைகள், பொலிஸ், ஏனைய அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பலவந்தமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் செயற்படும் ஐக்கிய நாடுகள் செயற்குழு போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களைத் தொகுத்து வருகின்றது.

4.4 2017இல் இதனுடன் தொடர்புபட்ட விடயங்களை அன்றைய ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிரிசேன வழிகாட்டலின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு கருத்துக்கணிப்புத் தரவுகளுக்கான பத்திரங்களை விநியோகித்தது. பூரணப்படுத்தப்பட்ட கருத்துக்கணிப்புப் பத்திரங்கள் பிரதேச செயலாளர்களின் துணையுடன் மாவட்ட செயலாளர்களால் அமைச்சுக்குத் திருப்பியனுப்பப்பட்டன. 2018 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆந் திகதி

[29] கா.ஆ.அ சட்டம், பிரிவு 10(1)(உ).

[30] கா.ஆ.அ "வெயிடு" 12 டிசம்பர் 2020 இல் வெளியிடப்பட்டது " http://www.ompsrilanka.org/omp-documents/omp-publications

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 14,700[31] கருத்துக்கணிப்புப் பத்திரங்கள் கா.ஆ.அ இற்குக் கையளிளக்கப்பட்டன. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பதிவுகளின் மூலங்களாக கடந்த காலத்தில் விசாரணை ஆணைக்குழு நடதத்திய பதிவுகளே முக்கியத்துவமாகக் காணப்படுகின்றன. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரிப்பதற்குக் குறைந்தபட்சம் ஒன்பது விசாரணை ஆணைக்குழுக்கள் இருந்து வருகின்றன,[32] அவற்றுள் பல பகிரங்க அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. மேலும் அவற்றுள் பலவற்றின் இறுதி அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டியுள்ளது.

4.5 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் அவர்களின் குடும்பங்கள் மூலம் நேரடியாகப் பெறப்பட்ட தகவல்கள் சம்பந்தமான விசாரணை ஆணைக்குழுவின் கடந்தகாலப் பதிவுகள் முப்பது வருடகாலத்துக்குமாக ஜனாதிபதியின் பதவி முத்திரை பொறிக்கப்பட்டு தேசிய சுவடிகள் திணைக்களத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. கா.ஆ.அ இன் 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையில் விபரிக்கப்பட்டதன்படி, கடந்தகால விசாரணை ஆணைக்குழுவின் பதிவுகளை அணுகுவதற்குத் தேவையான அனுமதிகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் அடுத்தடுத்து வந்த செயலாளர்கள் மூலம் கா.ஆ.அ பெற்றுக்கொண்டது.[33] மேலும் தேசிய சுவடிகள் திணைக்களத்தின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வீடமைப்பு கட்டுமான மற்றும் கலாசார விவகார அமைச்சின் 2019.05.24 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தில் இச்செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தே.சு.தி இற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

4.6 இவ்வகையான அனுமதிகளின் அடிப்படையில், 2019.07.22 ஆந் திகதி தே.சு.தி உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கா.ஆ.அ கைச்சாத்திட்டது. இருப்பினும் தே.சு.தி இன் துல்லியத் தன்மை குறைபாடு காரணமாக கா.ஆ.அ இற்கு அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடரமுடியாமற் போனது.

4.7 கா.ஆ.அ இனுடைய வேண்டுகோள்களின்படி முப்படையினரும் தமது செயற்பாடுகளின்போது காணாமல் போன படையினர் சம்பந்தமான

---

[31] 2018 ஆண்டறிக்கையின் பந்தி 3.16 கா.ஆ.அ 14641 கோவைகளை தே.ஒ.ந.அ மூலம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றது.

[32] விசாரணை ஆணைக்குழுக்கள் ஒன்பதும் பின்வருமாறு; காணாமல் போனவர்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு, 2013 இல் தாபிக்கப்பட்டது (பரங்கம ஆணைக்குழு என அறியப்பட்டது). கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, 2011 இல் தாபிக்கப்பட்டது. கடத்தப்பட்டது காணாமலாக்கப்பட்டது ஆட்கள்மீது மரணத் தாக்குதல் புரிவது சம்பந்தமாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 2006 இல் தாபிக்கப்பட்டது. (மகாநாம திலகரத்ன ஆணைக்குழு என அறியப்பட்டது). பலவந்தமாக வலிந்து காணாமலாக்கப்பட்டது பற்றி விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 1998 இல் தாபிக்கப்பட்டது (அகில இலங்கை ஆணைக்குழு என அறியப்பட்டது). காணாமலாக்கப்படுவது சட்டபூரவமற்ற கைது பத்தலந்த தடுப்புக்காவல் நிலைய நடவடிக்கை பற்றி விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 1995 இல் தாபிக்கப்பட்டது. மத்திய வடமத்திய ஊவா மாகாணங்களில் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 1994 இல் தாபிக்கப்பட்டது. மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 1994 இல் தாபிக்கப்பட்டது. பலவந்தமாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு 1992 இல் தாபிக்கப்பட்டது. புதிய ஆணைகள் 1992 மற்றும் 1993 இல் வழங்கப்பட்டன.

[33] பார்க்க. கா.ஆ.அ ஆண்டறிக்கை (2019) பந்தி 3.15-3.16 (**ஆண்டறிக்கை 2019**)

தகவல்களடங்கிய பட்டியலை வழங்கியுள்ளனர். இலங்கை பொலிஸ் படையின் செயற்பாடுகளின் போது காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களைக் கா.ஆ.அ இன்னும் பெற வேண்டியுள்ளது. இருப்பினும் இலங்கை பொலிஸ் துறை பெற்றுக்கொண்ட காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான பட்டியலை கா.ஆ.அ பெற்றுள்ளது.

4.8 பலவந்தமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் செயற்படும் ஐக்கிய நாடுகள் செயற்குழு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாம் பெற்றுக்கொண்ட அனைத்து அறிக்கைகளையும் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ளது. 2019 இல் வெளிவிவகார அமைச்சு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட 12,664 அறிக்கைகளை கா.ஆ.அ இற்கு அனுப்பியது. அதில் 6,066 விபரமற்றதான அறிக்கைகளும் 6,598 விபரங்களுடனான அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன[34].

4.9 கா.ஆ.அ தாபிக்கப்பட்டதிலிருந்து 2020 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான பின்வரும் பதிவுகள் பெறப்பட்டுள்ளன.

மூலங்கள்	அறிக்கைகளின் எண்ணிக்கை
காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கா.ஆ.அ இன் தலைமை அலுவலகத்துக்கு நேரடியாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்	1,377
காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கா.ஆ.அ இன் நான்கு பிராந்திய அலுவலகங்களுக்கும் நேரடியாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்	1,354
காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் தே.ஒ.ந. அமைச்சினால் வழங்கப்பட்ட அறிக்கைகள்	14,702
படை நடவடிக்கைகளில் ஈடுபடும் போது காணாமல் போன படையினர் பற்றி இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்ட தகவற்பட்டியல்கள்	3257
படை நடவடிக்கைகளில் ஈடுபடும் போது கர்ணாம்ல் போன படையினர் பற்றி இலங்கைக் கடற்படையினால் வழங்கப்பட்ட தகவற்பட்டியல்கள்	452
படை நடவடிக்கைகளில் ஈடுபடும் போது காணாமல் போன படையினர் பற்றி இலங்கை வான் படையினால் வழங்கப்பட்ட தகவற்பட்டியல்கள்	34
காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை பொலிஸ் பெற்றுக்கொண்ட அறிக்கைகள்	5,307
காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் ப.வ.கா.செ.கு பெற்றுக்கொண்ட அறிக்கைகள்	12,664
மொத்தம்	**39, 417**

[34] வ.கா.ச.செ.கு இன்படி அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல் வழங்கத் தவறிய முறைப்பாடுகள் "தெளிவற்றவை" எனக்குறிப்பிடப்பட்டன. அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல் வழங்கிய முறைப்பாடுகள் "தெளிவானவை" எனக்குறிப்பிடப்பட்டன.

முறைப்பாடுகள்

4.10 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் எவரிடமிருந்தும் அல்லது வேறு எவரிடமிருந்தும் அல்லது நிறுவனம் மூலமும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் கா.ஆ.அ இற்கு உண்டு[35].

4.11 கா.ஆ.அ தாபிக்கப்பட்டதிலிருந்து 2020 யூன் மாதம் 30 திகதி வரையில் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் தலைமை அலுவலகமும் பிராந்திய அலுவலகங்களும் 2,731 முறைப்பாடுகளை நேரடியாகப் பெற்றுள்ளன. கொள்ளை நோய்ப் பரவல் மூலம் ஏற்பட்ட ஊழியர் மட்டுப்படுத்தல் காரணமாக முறைப்பாடுகளைக் கொண்டு நடத்தும் செயன்முறையில் தாமதம் நிலவியது.

4.12 முறைப்பாடுகளைக் கொண்டு நடத்தும் செயன்முறைக்கு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களிடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெறவேண்டிய அவசியம் கா.ஆ.அ இற்கு உண்டு. அவர்கள் தமது காணாமற்போன அல்லது காணாமலாக்கப்பட்ட உறவு தொடர்பில் வழங்கிய தகவல்கள் அலுவலகத்துக்குக் கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்தி அதனை வழங்க வேண்டும். கா.ஆ.அ நேரடியாகப் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பிலும் 2018 மார்ச்சு மாதம் தே.ஒ.ந அமைச்சின் மூலம் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பிலும் தகவல் உறுதிப்படுத்தற் கடிதங்களை கா.ஆ.அ அனுப்பிய வண்ணமே உள்ளது. கா.ஆ.அ இன் இடைக்கால அறிக்கை பற்றிய விசாரணைச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக 2020 சனவரியில் கண்டி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இடைக்கால அறிக்கைகளைக் கோருமாறு விண்ணப்பங்களை உறுதிப்படுத்தற் கடிதங்களுடன் சேர்த்து கா.ஆ.அ அனுப்பியது.

4.13 2020 டிசம்பர் 30 ஆந் திகதி வரையில் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டமைக்கான 6,639 உறுதிப்படுத்தற் கடிதங்கள் கா.ஆ.அ இனால் குடும்பங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மிகுதி 9501 கடிதங்கள் குடும்பங்களுக்கு இன்னும் அனுப்பப்பட வேண்டியுள்ளன. தமிழ் பேசும் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக இது பாரதூரமாகத் தடைப்படுகின்றது. உறுதிப்படுத்தற் கடிதங்களின் பட்டியல் கீழ்வருமாறு:

மாவட்டம்	பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	உறுதிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	உறுதிப்படுத்தப்படவுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை
அம்பாறை	519	102	417
அநுராதபுரம்	279	279	00

[35] கா.ஆ.அ சட்டம் பிரிவு 12(அ)

பதுளை	5	5	00
மட்டக்களப்பு	5684	00	5684
கொழும்பு	116	116	00
காலி	263	263	00
கம்பஹா	250	249	1
அம்பாந்தோட்டை	183	182	1
யாழ்ப்பாணம்	1974	1974	0
களுத்துறை	190	190	0
கண்டி	623	623	00
கேகாலை	108	108	00
கிளிநொச்சி	1125	0	1125
குருநாகல்	428	428	00
மன்னார்	356	353	3
மாத்தளை	302	302	00
மாத்தறை	346	346	00
மொனராகலை	45	44	1
முல்லைத்தீவு	531	400	131
நுவரெலியா	15	14	01
பொலன்னறுவை	364	364	00
புத்தளம்	81	81	00
இரத்தினபுரி	216	216	00
திருகோணமலை	1517	0	1517
வவுனியா	620	0	620
மொத்தம்	**16140**	**6639**	**9501**

4.14 கா.ஆ.அ இன் தலைமை அலுவலகத்துக்கு வருகைதந்த குடும்பங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

மாதம்	பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை
சனவரி	22
பெப்ரவரி	
மார்ச்சு	
ஏப்பிறல்	
மே	
யூன்	

யூலை	
ஓகத்து	
செப்ரம்பர்	07
ஒக்ரோபர்	05
நவம்பர்	00
டிசம்பர்	01
மொத்தம்	35

காணாமற்போன ஆட்கள் பற்றிய தரவுப் படிவம்

4.15 காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக கா.ஆ.அ இனால் பயன்படுத்தப்படும் தரவுப் படிவம் பற்பல கட்டங்களுக்குட்பட்டுள்ளது. முதற்கட்டமாக சனாதிபதி செயலகத்தினாலும் தே.ஒ.ந அமைச்சினாலும் தயாரிக்கப்பட்ட படிவத்தையே கா.ஆ.அ பயன்படுத்தியது.

4.16 இருப்பினும் இப்படிவத்தின் மட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு விலாவாரியான காணாமற்போன தரவுப்படிவம் வடிவமைக்கப்பட்டது. அது ஏனைய நாடுகளில் உள்ள தொடர்புடைய நிறுவனங்கள், தரவு முகாமை நிபுணரின் ஆலோசனை, களநிலை ஊழியர்களின் கருத்துக்கணிப்பு மற்றும் குடும்பங்களின் கருத்துகள் போன்ற நியமங்களைக் கருத்திற்கொண்டே வடிவமைக்கப்பட்டது. கா.ஆ.அ இன் பொறுப்பாகிய தகவல் பெறுதலை மேம்படுத்துவதற்கு அதிக எண்ணிக்கையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதொரு கருவியை விருத்தி செய்வதன் காரணம் காணாமல் போன, காணாமலாக்கப்பட்ட மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களின் குடும்பங்களின் உறுப்பினர்கள் பலர் தற்போது பல வருடங்களாக மேம்படுத்தப்பட்ட சாத்தியம் கொண்டவர்களாகவே உள்ளனர். அதனால் கா.ஆ.அ எதிர்காலத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேறொரு வாய்ப்பு இருக்காது.

4.17 அந்தப் படிவம் 2018 ஆம் ஆண்டு பரீட்சிக்கப்பட்டது. அதன் பின்னர் பெறப்பட்ட கருத்துக்கணிப்பில் அந்தப் படிவம் விபரங்கள் கூடியதாக உள்ளதாகவும் பூரணப்படுத்துவதற்கு நேரம் எடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அது சில பகுதிகள் விடையளிக்கப்படாமல் விடுவதற்கும் வழிவகுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டன. அந்தப் படிவம் கா.ஆ.அ இன் அதிகாரி ஒருவரின் கருத்துப்படியே ஒழுங்கமைத்து வடிவமைக்கப்பட்டது. இருப்பினும் கா.ஆ.அ நாடு முழுவதும் வியாபித்திருக்காததன் படியால் இது நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவித்தது.

4.18 இந்தச் சவாலை முறியடிப்பதற்கு, காணாமல் போனமை சம்பந்தமாக தகவல் திரட்டுவதற்கான முதல்நிலைச் சாதனமாக இலகுபடுத்தப்பட்ட படிவம் ஒன்றை கா.ஆ.அ மீள்திட்டம் வகுத்து ஒழுங்கமைத்தது. அது ஏனைய தகவல் திரட்டும் ஆவணங்களுடன் இணைத்துப் பயன்படுத்தத்தக்கதாக அமையும். காணாமல்

போனோரின் தகவல்களைப் பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகவல்களை உள்ளடக்கக்கூடிய சர்வதேச நியமங்களைக் கொண்டமைந்ததாக அது தயாரிக்கப்பட்டது. அத்துடன் அது இலங்கையின் தனித்துவமான சூழமைவையும் தேவைகளையும் கொண்டதாகவும் அமைக்கப்பட்டது. இலகுபடுத்தப்பட்ட தரவுப்படிவத்தை கா.ஆ.அ இன் நிருவாகம் அங்கீகரித்ததுடன் அது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அணுகக்கூடியதாகவும் ஆக்கப்பட்டது.

4.19 2019 இல் பெறப்பட்ட கருத்துக்கணிப்புகள் வாயிலாக 2020 செப்ரம்பர் மாதத்தில் சிறிய மாற்றங்கள் புகுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட காணாமல் போனோருக்கான புதிய படிவம் முடிவுறுத்தப்பட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

4.20 மாற்றப்பட்ட படிவங்களை உறுதிப்படுத்துகையில் புதிய படிவங்களைக் கோரிய[36] குடும்பங்களுக்கு 149 காணாமல் போனோர் படிவங்களை கா.ஆ.அ வழங்கக்கூடியதாக இருந்தது.

தரவுத்தளம்

4.21 கா.ஆ.அ சட்டத்தின்படி காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதொரு தரவுத்தளத்தை உருவாக்கவும் முகாமை செய்யவும் பராமரிக்கவும் கா.ஆ.அ இற்கு அதிகாரம் உண்டு[37]. அனைத்துத் தரவுத்தளங்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தொழிநுட்பம்சார் பாதுகாப்பு உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்குரிய அதிகாரமும் கா.ஆ.அ இற்கு உண்டு[38].

4.22 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள், நிகழ்வுகள் மற்றும் புதைகுழிகள் போன்றவற்றுடன் தொடர்பான மூன்று பதிவகங்களைக் கொண்டதொரு தற்காலிக தரவுத்தளத்தினை கா.ஆ.அ உருவாக்கியுள்ளது. முறைப்பாட்டாளர்கள் மூலமாகவும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு அவற்றை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை ஆரம்பித்தும் உள்ளது. மேலும் ஒருங்கமைந்த மற்றும் நிலையான தரவுத்தளத்தை உருவாக்குவதற்கு அவசியப்படும் விடயங்களைத் திட்டமிட்டும் வருகின்றது. கா.ஆ.அ இன் கொள்கையையொத்த ஏனைய நியாயாதிக்க நிறுவனங்கள் உருவாக்கி வைத்துள்ள தரவுத்தளங்களை கா.ஆ.அ பரீட்சித்தும் உள்ளது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடுவது தொடர்பில் சர்வதேச நிபுணர்களுடன் ஆலோசனை செய்துள்ளதுடன் தரவுத்தளமொன்றை உருவாக்குவதிலுள்ள சவால்களை இனங்கண்டு சாத்தியமான தீர்வுகளை

[36] தற்காலிக தகவற்பட்டியல் பற்றிய விபரங்களுக்கு பார்க்க. பந்தி 4.34
[37] கா.ஆ.அ சட்டம் பிரிவு 13(1)(ஏ).
[38] கா.ஆ.அ சட்டம் பிரிவு 15(3)

எட்டுவதற்கான ஆலோசனையையும் உள்நாட்டு தரவுத்தள நிபுணர்களுடன் கா.ஆ.அ மேற்கொண்டுள்ளது. அத்தகைய தரவுத்தளம் புலன் விசாரணைகளுக்குத் துணைபுரிவதுடன் தனிப்பட்ட முறைப்பாடுகளை முகாமை செய்யும் சாதனமாகவும் செயற்படும்.

4.23 ஊழியர்களின் பதவி விலகல் மற்றும் ஒப்பந்த காலம் நிறைவுறல் உள்ளடங்கலான பலவாறான மனிதவள சவால்களை 2020 காலப்பகுதியில் தரவுப் பிரிவு எதிர்கொண்டது. மேலும் கா.ஆ.அ இல் பெரும்பான்மையான தரவுகள் வன்பிரதியாகவே உள்ளபடியால் அத்தகைய தரவுகளைக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு நாடு தழுவிய பல்வேறு முடக்கங்கள் தடையாகவும் தாமதப்படுத்துவதாகவும் அமைந்தன. இவ்வகையான சவால்களை முறியடிப்பதற்கு தரவுகளைக் கொண்டு நடைமுறைமுறைப்படுத்துவதற்காக பிராந்திய அலுவலர்களை உள்வாங்குவதற்கு நிருவாகம் தீர்மானித்தது. தலைமை அலுவலகத்திலிருந்து ஆணையாளர்களும் ஊழியர்களும் பிராந்திய அலுவலகங்களுக்குச் சென்று பிராந்திய ஊழியர்களுக்குத் தரவு செயற்படுத்தும் செயன்முறையைப் பயிற்றுவித்தனர்.

4.24 2018 ஆம் ஆண்டிலிருந்து குடும்பங்கள் மூலமாகவும் ஏனைய நிறுவனங்கள் மூலமாகவும் நேரடியாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஒருமுகப்படுத்தும் செயற்பாட்டில் கா.ஆ.அ ஈடுபட்டது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல்களைப் பெறும்போது அவற்றைத் தரவுத்தளத்தில் பதிவிடுவதற்கு முன்னர் மீளாய்வு செய்யும் செயற்பாட்டில் கா.ஆ.அ ஈடுபட்டது. அந்தச் செயன்முறை வழங்கப்பட்ட தகவல்கள் துல்லியமானவையா என்பதை மீளாய்வு செய்வதாகவும் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவர் கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்கு உட்படுபவரா என்பதை உறுதிப்படுத்துவதாகவும் ஏனைய பதிவுகளில் போலிகள் ஏதும் உள்ளனவா என்பதைப் பரிசீலிப்பதாகவும் அமையும்.

4.25 காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஒருவர் கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்கு உட்பட்டவரா என்பது முறைப்பாடுகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்களைப் பரீட்சிப்பதன் மூலமாகத் தீர்மானிக்கப்படும். உதாரணமாக காணாமல் போன திகதியும் இடமும் என்பதைக் குறிப்பிடலாம். கா.ஆ.அ இன் கடப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒருவரை அறியுமிடத்து முறைப்பாட்டுடன் சம்பந்தப்படக்கூடிய வேறு பொருத்தமான அரச நிறுவனத்தைப் பற்றி முறைப்பாட்டாளருக்கு கா.ஆ.அ தகவல் வழங்கும். அத்தகைய சூழ்நிலைகளின் போது அந்தக் காணாமல் போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவர் அலுவலகத்தின் கடப்பாட்டுக்கு உட்பட்டவர் என்பதை நிரூபிப்பதற்கான மற்றுமொரு வாய்ப்பை முறைப்பாட்டாளர் பெறுகின்றார். கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்கு உட்படுபவராக ஒருவரைத் தீர்மானிப்பதற்குப் போதிய தகவல்கள் முறைப்பாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் மேலதிக விபரங்களை கா.ஆ.அ குடும்பங்களிடம் கோரும்.

4.26 மேலே விபரித்தவற்றுக்கமைவாக, காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான 39, 416 அறிக்கைகளைச் செயற்படுத்துவதில் கா.ஆ.அ கவனத்துடன் இருந்தது. 2020 டிசம்பர் 31 வரையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான 21, 175 அறிக்கைகளைத் தனது தரவுத்தளத்தில் கா.ஆ.அ பதிவேற்றியுள்ளது.

4.27 2020 சனவரியில் தரவுகளைப் பதிவேற்றம் செய்யும் செயற்பாட்டை கா.ஆ.அ தொடர்ச்சியாக முடுக்கிவிட்டதுடன் தரவுகளைக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு தற்காலிகமாக ஏனைய பகுதிகளிலிருந்த ஊழியர்களைப் பணியொதுக்கியது. மேலும் பெறப்பட்ட குறைந்தபட்சத் தகவல்களைக் கொண்ட முறைப்பாடுகள் தரவுத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக நேரம் ஒதுக்கி வேலை செய்யும் ஊழியர்களின் தேவையும் நிலவுகின்றது.

காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் பட்டியல்

4.28 தரவுகளின் இரகசியத்தன்மை பேணல் மற்றும் பாதுகாத்தல் என்ற அம்சங்களுடன் தொடர்புடைய சகல சட்டங்களையும் கருத்திற்கொண்டு பொது மக்களின் அறிகைக்காக காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினைகளை வெளியிடுவதற்கான அதிகாரத்தை கா.ஆ.அ கொண்டுள்ளது[39].

4.29 2020 நவம்பரில் "காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் பட்டியல்" ஒன்றை கா.ஆ.அ வெளியிட்டது[40]. அந்தப் பட்டியல் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் தற்காலிக பட்டியலிலிருந்து பெறப்பட்டது. அது 2020 பெப்ரவரி மாதம் கணக்கெடுப்பு நோக்கம் கருதி தயாரிக்கப்பட்டது என்பதுடன் அது பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

4.30 கடந்தகால விசாரணை ஆணைக்குழுக்கள் தமது கடப்பாட்டுக்குட்பட்ட காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் பட்டியல்களைத் தொகுத்திருந்த போதிலும் அவற்றுள் ஒரு சிலவையே வெளியிடப்பட்டுள்ளன[41]. மேலும் ஒவ்வொரு விசாரணை ஆணைக்குழுவினதும் கடப்பாடுகள் கால எல்லை சூழ்நிலை மற்றும் பிராந்தியம் என்பவற்றால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அந்த விசாரணை ஆணைக்குழுக்களின் மூலமும் ஏனைய அரச நிறுவனங்கள் மூலமும் பெறப்பட்ட தரவுகள் ஒரே தளத்தில் தகவல்களைப் பெறும் வண்ணம் ஒருமுகப்படுத்தப்படவில்லை.

[39] கா.ஆ.அ சட்டம் பிரிவு 13(1)(ஒ)(v)

[40] கா.ஆ.அ வெளியீடு, 29 சனவரி 2021, http://www.ompsrilanka.org/omp-documents/omp-publications

[41] பார்க்க. மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பாகம் II அமர்வுப் பத்திர இல. V (1997) "காணாமலாக்கப்பட்டோரின் பெயர்ப்பட்டியல்"

4.31 இத்தகைய செயற்பாடுகளைப் போலல்லாது கா.ஆ.அ இன் தனித்துவமான கடப்பாட்டின்படி தரவுகளை ஒருமுகப்படுத்தும் முயற்சியில் அது செயற்படுகின்றது. அதன் பட்டியல் கால எல்லை சூழமைவு மற்றும் பிராந்தியம் போன்றவற்றால் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

4.32 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தகவல்களைப் பட்டியலொன்றாக ஒருமுகப்படுத்துவது தனிப்பட காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் நிகழ்வுகளைப் பற்றி இலங்கைக்குள் ஒன்றிணைந்தவொரு பட்டியலைத் தயாரிப்பதற்கும் ஏதுவாக்கும். அது கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்குள் அடங்குகின்றது. அது சேவைகளையும் நிவாரணத்தையும் இழப்பீடுகளையும் வழங்குவதற்கும் காரணிகளை அடையாளம் காண்பதற்கும் குறிப்பிட்ட நிகழ்வுகள், சூழ்நிலைகளில் அக்காரணிகள் மீறப்பட்டமைக்கான முறை மற்றும் காணாமலாக்கப்பட்டமை போன்றவற்றை அடையாளம் காண்பதற்கும் விசாரணைகளையும் புலன் விசாரணைகளையும் நடத்துவதற்கும் உள்ளக செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான திட்டவட்டமான கோவைகளை உருவாக்குவதற்கும் இலக்கு வைக்கப்பட்ட திட்டங்களை அதன் மூலம் அணுகுவதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் கா.ஆ.அ அனுசரணை வழங்கும். காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பதிவுகளை ஒருமுகப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் எடுக்கும் முயற்சிகளைக் கருத்திற்கொண்டு உத்தியோபூர்வமாக ஒன்றிணைந்த பதிவு ஒன்றினை உருவாக்குவதற்குப் பல வருடங்கள் எடுக்கும் என்று கா.ஆ.அ கருதுகின்றது. கா.ஆ.அ வெளியிட்ட பட்டியல் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு உத்தியோபூர்வமாக ஒன்றிணைந்த பதிவு ஒன்றினை உருவாக்குவதனை நோக்கிய முக்கியமான நகர்வாகும்.

4.33 2020 பெப்ரவரியில் கா.ஆ.அ தற்காலிக பட்டியல் ஒன்றை வெளியிட்டது. அத்தோடு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அழைப்பு விடுத்துத் தமது அன்புக்குரியவர்களின் விபரங்களைப் பரிசீலனை செய்வதற்கு கா.ஆ.அ இனைத் தொடர்புகொள்ளுமாறும் அல்லது அதில் உள்வாங்கப்படாதவர்கள் பற்றித் தகவல் தெரிவிக்குமாறும் கேட்கப்பட்டது[42]. தற்காலிக பட்டியலின் பிரதிகள் தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. குடும்பங்களுக்கு வசதியாகவும் இலகுவில் அணுகுவதற்காகவும் அலுவலகங்களுக்கு வருகைதருமாறும் அல்லது தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தகவல்களைப் பரிசீலனை செய்யுமாறும் அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறும் கேட்கப்பட்டன. பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய தகவல்களை அறிந்த பொதுமக்களும் அத்தகைய தகவல்களை கா.ஆ.அ

[42] கா.ஆ.அ "ஊடக அறிக்கை-காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்: காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் இடைக்காலப் பட்டியலைக் கணக்கெடுத்தல்" (9 பெப்ரவரி 2020) <https://twitter.com/ompsrilanka/status/1226367749380767744/photo/1 9 நவம்பர் 2020 இல் வெளியிடப்பட்டது

இற்கு வழங்குவதற்கு ஆர்வமூட்டப்பட்டனர். மார்ச்சு மாத இறுதிப் பகுதியில் இலங்கை முழுவதுமாக முடக்க நிலைக்குள்ளாகும் வரையில் இச்செயன்முறை தொடர்ந்து கொண்டிருந்தது.

4.34 ஏககாலத்தில் கா.ஆ.அ உள்ளக கணக்கெடுப்புச் செயன்முறையில் ஈடுபட்டது. அவற்றுள் நேரடியான கோவைகளாகவோ பட்டியலகளாகவோ உள்ள தகவல்களை விடுத்து தரவுத்தளத்திலுள்ள தகவல்களுக்கு வலுச்சேர்க்கும் படிமுறைகளும் பதிவுகளிலுள்ள போலித் தன்மைகளைப் புறந்தள்ளலும் கா.ஆ.அ இன் கடப்பாட்டிற்குட்படும் முறைப்பாடுகளை இனங்காணலும் இடம்பெற்றன. 22 மாவட்டங்கள் சார்பிலும் 809 வழக்குகள் போலித்தன்மை கொண்டவை என்பதை தரவு முகாமைப் பிரிவு இனங்கண்டுள்ளது.

4.35 2020 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் குடும்பங்கள் வழங்கிய காரணிகள் அடிப்படையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. 22 மாவட்டங்கள் சார்பிலும் 151 முறைப்பாடுகளை கா.ஆ.அ நிராகரித்தது. ஏனெனில் அவை அலுவலகத்தின் கடப்பாட்டுக்கு உட்பட்டிருக்கவில்லை. பிரச்சினை, அரசியல் கலவரம் அல்லது பொதுக் குழப்பங்கள் மூலமாகக் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவர்கள் அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது காணாமல் போனதாக அடையாளம் காணப்பட்ட படைகளின் அல்லது பொலிஸ் பிரிவின் சிப்பந்திகள் போன்றோர் கா.ஆ.அ சட்டத்தின் பிரிவு 27 இன்படி அலுவலகத்தின் கடப்பாட்டுக்கு உட்படுகின்றனர். அந்தப் பட்டியல் தெளிவான முறையில் கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்குட்படும் முறைப்பாடுகளை உள்ளடக்குகின்றது என்பதுடன் கடப்பாட்டுக்குட்படுவதற்கான மேலதிக தெளிவுறுத்தல்கள் அவசியப்படும் முறைப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. அந்தப் பட்டியல் தெளிவான முறையில் கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்குட்படாத முறைப்பாடுகளைப் புறந்தள்ளுகின்றது. அதாவது சுனாமி அனர்த்தத்தினால் காணாமல் போன ஆட்கள் அல்லது நீதிமன்ற வழக்குக்குட்பட்டுக் கொலையுண்டிருத்தல் போன்ற கடத்தல் அல்லது வலிந்து கொண்டு செல்லப்பட்ட காரணிகளுக்கான அடிப்படைகளற்றவற்றைக் குறிப்பிடலாம்.

4.36 கா.ஆ.அ இன் கடப்பாட்டுக்கு உட்படாத முறைப்பாடுகளை வழங்கிய குடும்பங்களை மேலதிக விபரங்கள் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் அவை அக்கடப்பாட்டுக்குட்படும் விடயங்களை நிரூபிக்கும் தன்மையைக் கொண்டிருக்கலாம். பட்டியலுக்குள்வாங்கப்பட்ட சில முறைப்பாடுகள் விபரமான தகவல்களைக் கொண்டிராததன் காரணமாக மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் குடும்பங்களை கா.ஆ.அ தொடர்புகொள்ள வேண்டிய நிலைமை உள்ளது. மேலும் அந்த முறைப்பாடுகள் அலுவலகத்தின் கடப்பாட்டுக்கு உட்படுகின்றதா என்பதைத் தீர்மானிக்கும் நிலைமையும் கா.ஆ.அ இற்கு உண்டு.

4.37 பட்டியலைத் தயாரிக்கும் செயன்முறை கொவிட்-19 கொள்ளை நோய் பரவல் காரணமாகக் கடுமையானத் தடைப்பட்டுப்போனது. போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்தல் போன்ற காரணங்களால் ஊழியர்களுக்கு நேரடிக் கோவைகளையும் தமது அலுவலகங்களையும் அணுகமுடியாமல் போனது.

4.38 இந்தச் சவால்களையும் மீறி காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய முறைப்பாடுகளும் தகவல்களும் 2020 நவம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்டது[43]. அதில் மட்டக்களப்பு மாவட்டத்தையும் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது காணாமல் போன படையினர் பற்றி வழங்கிய தகவல்களையும் தவிர சகல மாவட்டங்களின் தகவல்களும் அடக்கப்பட்டிருந்தன. கா.ஆ.அ இன் தரவுத்தளத்தில் உள்ள காணாமல் போனது சம்பந்தமான 19,013 சம்பவங்கள் பற்றிய விபரங்களை அப்பட்டியல் கொண்டிருந்தது. பெருமளவிலான தகவல்களை உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தின் முறைப்பாடுகளும் தகவல்லும் 2021 இன் முற்பகுதியில் வெளியிடப்படவுள்ளன.

4.39 நேர்த்தியான தன்மையைப் பேணும் வகையில் 2020 யூலை 31 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைத்த தரவுகள் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் பட்டியல் மீண்டும் இற்றைப்படுத்தப்படும் போது அவை அவற்றுடன் இணைக்கப்படும். கா.ஆ.அ இற்கு புதிய தகவல்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் தரவு முகாமைப் பிரிவு அவற்றைத் தரவுத்தளத்தில் பதிவேற்றுவதைத் தொடர்ந்து வருகின்றது.

4.40 கா.ஆ.அ இற்கு குடும்பங்களின் மூலமும் முப்படைகளின் மூலமும் தே.ஒ.ந அமைச்சு மூலமும் நேரடியாகக் கிடைக்கப்பெற்ற தரவுகளே இப்பட்டியலைத் தொகுக்கும்போது உபயோகிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டோருக்கும் குடும்பங்களுக்கும் ஆதரவு வழங்கும் பிரிவு மற்றும் பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றுடன் இணைந்து தரவு முகாமைப் பிரிவு பட்டியல் தயாரிக்கும் செயற்பாட்டை மேற்கொண்டது.

4.41 பின்வரும் விடயங்களைப் பட்டியல் கொண்டிருந்தது: i) கா.ஆ.அ இனால் வழங்கப்பட்ட இலக்கம்; ii) காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவரின் பெயர் ஆங்கிலத்திலும் சிங்களத்தில் அல்லது தமிழிலும்; iii) அவர் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட திகதி; iv) காணாமல் போனவர் அல்லது காணாமலாக்கப்பட்டவர் கடைசியாக வசித்த மாவட்டம். காணாமல் போன திகதியோ காணாமல் போன மாவட்டமோ தெளிவற்றதாக இருக்கும் பட்சத்தில் அது "ஏற்புடையதன்று" எனக் குறிப்பிடப்படும். இலகுவாக அறிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் முறைப்பாட்டாளர் வதியும் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டே பட்டியல் வகுக்கப்படுகின்றது. ஆனாலும் இரகசியத் தன்மையையும்

[43] கா.ஆ.அ ஊடக அறிக்கை- பெறப்பட்ட முறைப்பாடுகளும் தகவல்களும் (26.11.2020) https://twitter.com/ompsrilanka/status/1331909597460713472/photo/1 & https://twitter.com/ompsrilanka/status/1331909597460713472/photo/2

பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தும் வகையில் முறைப்பாட்டாளரின் விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை.

4.42 கடமையில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் காணாமல் போனதாக உறுதிப்படுத்தப்பட்ட படையினர் பற்றிய தகவற்பட்டியல் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்கும்: i) கா.ஆ.அ இனால் வழங்கப்பட்ட இலக்கம்; ii) காணாமல் போனவரின் பெயர் ஆங்கிலத்தில்; iii) அவர் காணாமல் போன திகதி; iv) படையினருக்கு முப்படை வழங்கிய சேவை இலக்கம்; v) காணாமல் போனவரின் பதவி; vi) காணாமல் போன இடம்; vii) இராணுவ வீரராக இருப்பின் படைத்தளத்தின் பெயர்.

4.43 தகவல் அல்லது முறைப்பாடு சிங்களத்திலோ தமிழிலோ வழங்கப்படின் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவரின் பெயரின் எழுத்துகள் வழங்கப்பட்டபடியே எழுதப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவரின் பெயரின் ஆங்கில எழுத்துகள் நியமமான எழுத்தமைப்புகளைக் கொண்டே பிரயோகிக்கப்படுகின்றன. பட்டியலின் நேர்த்தியை உறுதிப்படுத்தவும் தேடுதலை இலகுவாக்கவும் அது துணைபுரியும். தகவல் அல்லது முறைப்பாடு ஆங்கிலத்தில் வழங்கப்படின் பெயரின் எழுத்துகள் வழங்கப்பட்டபடியே எழுதப்படுகின்றன.

4.44 பட்டியல் வெளியீடானது காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின் தரவுகளைத் தொகுக்கும் தற்போடைய செயற்பாட்டின் ஓர் அங்கமாகும். இது கா.ஆ.அ தனது கடப்பாட்டிற்கு அமைவாக காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி உத்தியோகபூர்வமான ஒருங்கமைந்த பதிவு ஒன்றினைத் தயாரிப்பதற்கு வாய்ப்பளிக்கும். 2020 நவம்பரில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தகவற்பட்டியலின் வன்பிரதியைப் பெற்றுக்கொள்வதற்குக் கொழும்பிலுள்ள கா.ஆ.அ இன் தலைமை அலுவலகத்திற்கும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மாத்தறையிலுள்ள பிராந்திய அலுவலகங்களுக்கும் வருகைதருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. 2020 டிசம்பர் 10 ஆந் திகதி அத்தகவற் பட்டியல் கா.ஆ.அ இன் இணையதளத்திலும் பெறக்கூடிய வசதியளிக்கப்பட்டது[44].

5. பாதிக்கப்பட்டவர்களதும் சாட்சிகளதும் பாதுகாப்பு

5.1 பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தொகுதி ஒன்றை உருவாக்குவதும் நடைமுறைப்படுத்துவதும் கா.ஆ.அ இன் கடப்பாடாகும்[45]. கா.ஆ.அ உடனும் அதன் அலுவலர்களுடனும் வளாகங்களுடனும் தொடர்புபட்டுள்ள பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், காணாமல் போன மற்றும்

[44] கா.ஆ.அ "வெளியீடு" 12.12.2020 http://www.ompsrilanka.org/omp-documents/omp-publications
[45] கா.ஆ.அ சட்டம் பிரிவு 13(1)(எ)

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களது தேவைகளையும் நலன்களையும் கவனிப்பதற்கும் பாதுகாப்புப் பிரிவு கடப்பாடுடையதாகும்.

5.2 கொவிட்-19 இன் விளைவாக கா.ஆ.அ இன் ஊழியர்களையும் வளாகங்களையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளைப் பாதுகாப்புப் பிரிவு முன்னெடுத்துள்ளது. இம்முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் கண்காணிப்பதற்கும் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நியமிக்கப்பட்டார். அவரே முதன்மைத் தொடர்பு கொள்ளல் அதிகாரியும் ஆவார்.

5.3 பாதுகாப்புப் பிரிவு சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களையும் உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டல்களையும் பின்பற்றி கொவிட்-19 இற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் உள்ளடங்கிய வழிகாட்டல்களைத் தயாரித்தது. தொடர்ச்சியான பல ஒழுங்கு நடவடிக்கைகள் புகுத்தப்பட்டன. அவற்றுள் ஊழியர்களின் உடல் வெப்பநிலையைத் தொடர்ச்சியாகப் பரிசோதித்தல், ஒளாகத்தைத் தொற்று நீக்கம் செய்தல், வீட்டிலிருந்து கொண்டு பணியாற்றும் ஊழியர்களை ஒருங்கிணைத்தல், கொவிட் தொற்று இருப்பதைப் பரிசோதனை மூலம் அறியப்பட்ட ஊழியர்கள் கையாண்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து கொண்டு செல்லல் போன்றவையே அவையாகும். இது தொடர்பாக காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் போன்றோருடன் கா.ஆ.அ ஒன்றிணைந்து செயற்பட்டது.

5.4 பாதுகாப்புப் பிரிவுக்கான மூலோபாயம் ஒன்றை கா.ஆ.அ நிருவாகம் அங்கீகரித்தது. அம்மூலோபாயம் பிரிவின் நோக்கத்தைச் ஒழுங்குபடுத்துவதற்கும் வெளி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் பிரிவின் நடவடிக்கைகளுக்குத் தேவையான விடயங்களை உள்வாங்குவதற்கும் துணைபுரியும்.

5.5 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் சட்டத்தரணிகள் போன்ற நீதிசார் செயற்பாட்டாளர்களுக்கும் கா.ஆ.அ உடன் நேரடியாக இணைந்து செயற்படும் ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்த பாதுகாப்பைக் கொண்டமைந்த அறிக்கைகளையும் கா.ஆ.அ பெற்றுள்ளது. அந்தப் பாதுகாப்புத் திட்டங்கள் உடல்ரீதியான தாக்குதல்கள் வாய்மொழி மூலமான தாக்குதல்கள் பல்லூடகங்கள் வாயிலான தாக்குதல்கள் மறைந்திருந்து கண்காணித்தல் மற்றும் துன்புறுத்தல்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

5.6 தனிப்பட்ட முறைப்பாடுகளில் ஒருவரின் பாதுகாப்பு தற்சமயம் அவசியம் எனக்கருதும் போது அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கா.ஆ.அ சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கவனப்படுத்தியுள்ளது.

6. நிறுவனஞ்சார் அபிவிருத்தி

6.1 கா.ஆ.அ தனது தலைமை அலுவலகத்தையும் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களையும் முழுமையான செயற்பாடு கொண்டதாகத் தொடர்வதற்குரிய மகத்தான சக்தியையும் வளங்களையும் ஏற்றுள்ளது. பாதிப்புக்குட்பட்டுள்ள மாவட்டங்களில் பிராந்திய அலுவலகங்களை நிறுவியுள்ளமை கா.ஆ.அ இனைக் குடும்பங்கள் இலகுவாக அணுகுவதற்குத் துணைபுரிந்துள்ளது. எல்லா வேளையிலும் உணர்வுபூர்வமான முறையிலும் கௌரவமாகவும் மரியாதையாகவும் குடும்பங்கள் நடத்தப்பட்டுவதை உறுதிப்படுத்தும் வண்ணம் கா.ஆ.அ செயற்பட்டு வருகின்றது.

6.2 முக்கியமான பதவிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதிலும் அப்பதவிகளில் அவர்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும் கா.ஆ.அ சவால்களை எதிர்கொள்வதோடு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதிக்கு விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளினால் அதனை முழுமையாகப் பயன்படுத்துவதிலும் கா.ஆ.அ சவால்களை எதிர்கொள்கின்றது. 2020 இல் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்றும் கா.ஆ.அ இன் நிறுவனரீதியான அபிவிருத்தியைத் தடைப்படுத்தியது.

6.3 முதலாவது நிருவாகத்தைப் பொறுத்தவரையில் தவிசாளரும் ஆணையாளர்களும் நிறுவனத்திலும் அபிவிருத்தியிலும் முக்கிய பங்காற்றியிருந்தனர். முக்கியமான பணிகளைச் செயற்படுத்துவதற்காகப் பல்வேறு மட்டங்களில் அவர்கள் ஈடுபட்டனர். கா.ஆ.அ இன் அபிவிருத்தி உபாயங்களைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக நிருவாகம் தொடர்ச்சியாக ஒன்றுகூடியுள்ளதுடன் ஆண்டுக்கு 26 கூட்டங்களைக் கூட்டியும் உள்ளது. கா.ஆ.அ இன் தனிப்பட்ட பிரிவுகளை ஆணையாளர்கள் தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்துள்ளதுடன் பிரிவுகளுக்கான தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்காத வேளைகளில் அல்லது பிரிவுகள் நிறுவப்பட்டிருக்காத வேளைகளில் ஊழியர்களுடன் கருமங்களை ஆற்றியும் உள்ளனர். மேலும் விசாரணைகளை நடத்துவதிலும் களங்களுக்கு விஜயம் செய்வதிலும் குடும்பங்களுடனும் பொது அமைப்புகளுடனும் ஏனைய அரச நிறுவனங்களுடனும் நிகழ்வுகளை நடத்துவதிலும் ஆணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பௌதீக வளாகங்களை நிறுவுதல்

6.4 முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இல. 32, சேர் மார்கஸ் பெனாண்டோ மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ள "சிராவஸ்தி சதுக்கம்" தொகுதியினை இரண்டு வருடகாலத்துக்கு கா.ஆ.அ இற்கு ஒதுக்கினார். அது 2020 ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவடைந்தது.

6.5 இருப்பினும் 2019 இலிருந்து கா.ஆ.அ தனது இடத்தினை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அதிகளவிலான வேண்டுகோள்களைப் பெற்றிருந்தது. 2019 நவம்பரில்

சிராவஸ்தி தொகுதியினை விட்டு வெளியேறுமாறு கா.ஆ.அ இற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் வேறு இடத்துக்கு அலுவலகத்தை மாற்றுமாறும் கேட்கப்பட்டிருந்தது. அதனுடன் தொடர்புபட்டு நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையில் இல. 408, 03 ஆம் மாடி, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு கா.ஆ.அ 2020 யூன் 15 ஆந் திகதி இடமாற்றம் செய்யப்பட்டது. இடமாற்றம் செய்யப்பட்ட கட்டிடம் இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்கும் பங்கிடப்பட்டுள்ளதுடன் அலுவலக வளாகத்துக்கு பாவனைக் கட்டணங்கள் உட்பட மாதாந்த வாடகையாக ரூபா 1.8 மில்லியன் செலுத்துத்தப்படுகின்றது.

ஊழியர் ஆட்சேர்ப்பு

6.6 கா.ஆ.அ தாபிக்கப்பட்டதிலிருந்து பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக துறை அனுபவம் கொண்ட தகுதியான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கா.ஆ.அ நேரம், சக்தி மற்றும் வளங்களைச் செலவு செய்துள்ளது.

6.7 பதவிகளுக்கான நிபந்தனை சார்ந்த அனுபமும் திறனும் கொண்டவர்களைக் கவரும் வகையில் பதவிகள் பல மீள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்பதை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதை வைத்தும் அபேட்சகர்களை நேர்காண்பதை வைத்தும் கா.ஆ.அ தீர்மானித்துள்ளது. கா.ஆ.அ பின்வரும் பதவிகளை மீள்திருத்தம் செய்துள்ளது. மனிதவள மற்றும் நிருவாகத் தலைவர் (HM 1-1), நிதி மற்றும் பெறுகைத் தலைவர் (HM 1-1), நிருவாக செயலாளர்/ முதுநிலை சட்ட அதிகாரி (MM 1-1), முதுநிலை சட்ட அதிகாரி (MM 1-1) இவற்றை அவ்வதிகாரிகளின் அனுமதிக்காகவும் அனுப்பியது. நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்புத் திட்ட அங்கீகாரத்தை நாடி அனுப்பி வைக்கப்பட்டது.

6.8 நிரந்தர பதவி வெற்றிடம் ஒன்றினை நிரப்புவதற்காக 2019 இல் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வைக் கொண்டு 2020 இல் கா.ஆ.அ அவ்வெற்றிடத்தை நிரப்பியது. ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முயற்சிகள் பொதுத் தேர்தல் மற்றும் நாட்டில் நிலவும் கொவிட் 19 கொள்ளை நோய் போன்ற காரணிகளால் பிரதானமாகப் பாதிக்கப்பட்டது.

6.9 2020 ஆம் ஆண்டு முழுவதும் 15 ஊழியர்கள் வேறு தொழில்களைக் காரணம் காட்டிப் பதவி விலகியுள்ளனர். 01 ஊழியர் தனது ஒப்பந்த காலத்தை நிறைவு செய்து சென்றதுடன் ஏனைய 12 ஒப்பந்த ஊழியர்கள் வேலைநிறுத்தம் காரணமாக வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டது. மேலும் 01 ஊழியர் பணி ஒதுக்கப்பட்ட அடிப்படையில் தனது சேவைகளை 2020 உடன் முடித்துக்கொண்டார்.

6.10 கா.ஆ.அ 2018 இல் தாபிக்கப்பட்ட போது முதலாவது தவிசாளராக நியமிக்கப்பட்டிருந்த திரு. சாலிய பீரிஸ் 2020 செப்ரம்பர் 30 இல் தனது பதவியிலிருந்து விலகினார்.

6.11 உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான கௌரவ நீதியரசர் உபாலி அபயரத்னா அதிமேதகு சனாதிபதியினால் கா.ஆ.அ இன் தவிசாளராக 30.11.2020 இலிருந்து செயற்படுவதற்கு நியமிக்கப்பட்டார்.

பிராந்திய அலுவலகங்கள்

6.12 கா.ஆ.அ இற்கு தலைமை அலுவலகத்தைக் கொழும்பிலும் தேவையான இடங்களில் பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கும் அதிகாரம் உண்டு[46]. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணியின் சிபாரிசுகளை அடுத்தும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் கா.ஆ.அ தனிப்பட ஆலோசனை நடத்துவதற்கும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் நிகழ்வுகள் குறித்த புவியியல் காரணிகளை அடுத்தும் யாழப்பாணம் மட்டக்களப்பு மன்னார் மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கு கா.ஆ.அ தீர்மானித்தது.

6.13 கா.ஆ.அ இன் பிராந்திய அலுவலகங்கள் முறைப்பாடுகளைப் பெற்று இடைக்கால அறிக்கைகளை வழங்குவதற்குத் துணைநல்கியதுடன் குடும்பங்களைச் சந்தித்தும் சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் கூட்டங்களை நடாத்தியது.

6.14 பிராந்திய அலுவலகங்களுக்குக் குடும்பங்கள் வருகை தந்த விபரங்கள் பின்வருமாறு

பிராந்திய அலுவலகங்கள்	2020 இல் வருகைதந்தோரின் எண்ணிக்கை
மாத்தறை	485
மன்னார்	654
யாழ்ப்பாணம்	852
மட்டக்களப்பு	இல்லை
மொத்தம்	1,991

6.15 பிராந்திய அலுவலகங்களில் நடைபெற்ற இடைக்கால அறிக்கைக்கான விசாரணைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு

பிராந்திய அலுவலகங்கள்	வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கைகளின் எண்ணிக்கை	அனுமதி கிடைக்கக் காத்திருக்கும் இடைக்கால அறிக்கைகளின் எண்ணிக்கை	இடைக்கால அறிக்கைக்காக நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை
மாத்தறை	1	5	7
மன்னார்	42	21	68

[46] கா.ஆ.அ சட்டம் பிரிவு 3(3)

யாழ்ப்பாணம்	24	15	59
மட்டக்களப்பு	-	11	13
மொத்தம்	67	52	147

செயன்முறைகள் மற்றும் விதிகளின் அபிவிருத்தி

6.16 கா.ஆ.அ தனது வினைத்திறன் மிக்க செயற்பாட்டுக்கான விதிகள் மற்றும் செயன்முறைகளை வகுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது[47]. 2020 முழுவதிலும் இடைக்கால அறிக்கை வழங்குதல், தரவுப்படுத்தல், கொவிட்-19 மற்றும் நிருவாக நடத்தைகள் போன்றவை சம்பந்தமான விதிகள், வழிகாட்டல்கள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றை கா.ஆ.அ வரையறுத்தது.

6.17 சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களை அமைந்தொழுகி ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான கொவிட்-19 பாதுகாப்புத் திட்டங்களை கா.ஆ.அ உள்வாங்கியது.

6.18 இடைக்கால அறிக்கை வழங்குவதற்கு கா.ஆ.அ கொண்டுள்ள கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுக்கு மேலதிகமாக, 2019 இல் நடைபெற்ற விசாரணைச் செயன்முறைகள் அடங்கலாக, 2020 இல் மேம்படுத்தப்பட்ட விசாரணைச் செயன்முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டன. அவை ஊழியர் பற்றாக்குறை காரணமாக இடைக்கால அறிக்கை வழங்கும் செயற்பாடுகளில் ஏற்பட்ட மட்டுப்படுத்தல் மற்றும் கொவிட்-19 கொள்ளை நோய் காரணமாக ஏற்பட்ட கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டன. மேலும் பிராந்திய அலுவலகங்களுக்கான செயன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. அவை இடைக்கால அறிக்கைகளுக்கான விசாரணைகளை நடத்துவதற்காகவும் விசாரணைகளை நடத்தும் அலுவலர்களுக்காகவும் மெய்நிகர் நேர்காணல்களை நடத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும் விசாரணைகளை நடத்தும் சந்தர்ப்பங்களில் விசாரணை அலுவலர்களும் பிராந்திய அலுவலகங்களின் ஊழியர்களும் கடைப்பிடிக்க வேண்டிய கொவிட்-19 வழிகாட்டல்களை வரையறுப்பதற்கும் இடைக்கால அறிக்கைகளை வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டன.

6.19 தரவுகளை ஒழுங்குபடுத்துவதில் நேர்த்தியும் துல்லியத் தன்மையும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு கா.ஆ.அ சட்டத்தின் பிரிவு 27 இன்படி கா.ஆ.அ இன் கடப்பாட்டிற்குட்பட்ட காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களை வகைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை கா.ஆ.அ தயாரித்துள்ளது. அது அந்த வகைப்படுத்தல் பற்றிய விவரணங்களையும் தற்காலிக தகவற்பட்டியலின் கணக்கெடுப்புச் செயன்முறை பற்றிய ஆவணப்படுத்தலையும் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் பற்றி கா.ஆ.அ இன் பல்வேறு பிரிவுகள்

[47] கா.ஆ.அ சட்டம் பிரிவு 11(ஆ), 26

மேற்கொண்ட நடவடிக்கைகளின் அறிக்கைகளைத் துல்லியமாகப் பேணுவதையும் தரவுக்கோவைகளை முடிவுறுத்துவதையும் உள்ளடக்கியுள்ளது.

6.20 ஆணையாளர்களின் நடத்தையைப் பொறுத்தவரையில் கா.ஆ.அ ஆணையாளர்களுக்கான இரகசியத்தன்மை பேணும் ஒப்பந்தமொன்றைத் தயாரித்துள்ளதுடன் அலுவலகத்தின் ஆணையாளர்களுக்கான நடத்தை விதிக்கோவை ஒன்றையும் தயாரித்துள்ளது.

குடும்பங்களின் உளவியல்ரீதியான எதிர்வினை மற்றும் உளவியல்ரீதியான உணர்ச்சி என்பவற்றை உறுதிப்படுத்தல்

6.21 2019 ஆம் ஆண்டு கா.ஆ.அ இன் நிருவாகம் உள்வாங்கிய உளவியல் உபாயத்தின் அடிப்படையில் தனது கடப்பாட்டினை நேர்த்தியாக நடைமுறைப்படுத்துவதை கா.ஆ.அ தொடர்கின்றது. கா.ஆ.அ இற்கு வருகைதருகின்ற குடும்பங்களை முதலாவது தொடர்புபடுத்துவதே குடும்பநல அலுவலர்களுடன்தான். அவர்கள் தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலும் செயற்படுவதுடன் நேரடியாகக் குடும்பங்களுடனும் பொதுமக்களுடனும் தொடர்புகொண்டு அவர்களுடைய முறைப்பாடுகளைக் குறித்துக்கொண்டு அவர்களுக்குத் தகவல்களை வழங்கி அலுவலகத்தின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களுடன் இணைந்து விடயங்களை முன்னெடுப்பவர்களாகவும் உள்ளனர்.

6.22 இவ்வருடத்தில் கா.ஆ.அ பாதிக்கப்பட்டவர்களுடனும் குடும்பங்களுடனும் ஆலோசனைகளை முன்னெடுத்துள்ளது. எனினும் நிலவும் கொவிட்-19 காரணமாக ஏற்பட்டுள்ள பொது சுகாதார வழிமுறைகளாலும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூலமாகவும் அதன் தொடர்ச்சியான செயற்பாடு தடைப்பட்டுப்போனது. வளாகங்களின் மாற்றங்களும் குடும்பங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதைத் தடைப்படுத்தியுள்ளன.

திறன்விருத்தியும் கற்றல் பகிர்வும்

6.23 2020 காலப்பகுதியில் கா.ஆ.அ ஊழியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகளையே நடாத்தியது. வெளிக்களப் பயிற்சி எவற்றையும் கா.ஆ.அ முன்னெடுக்கவில்லை. கொவிட்-19 காரணமாக ஏற்பட்டுள்ள பொது சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளாலும் விதிக்கப்பட்ட முடக்கங்கள் மூலமாகவும் பயிற்சிகளை நடாத்துவதும் பங்குபற்றுவதும் கடுமையான மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

6.24 2020 காலப்பகுதியில் கா.ஆ.அ இன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கீழ்வருமாறு:

திகதி	விடயம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை
4-5 மார்ச்சு	சுகல பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களுக்குமான பயிற்சியொன்று யாழ்ப்பாணத்தில் பின்வரும் விடயங்களில்	4

	நடைபெற்றது: (i) கா.ஆ.அ இன் கடப்பாடும் செயற்பாடுகளும்; (ii) இரகசியத்தன்மை பேணலும் கா.ஆ.அ இன் சட்டரீரியான கடப்பாடுகளும்; (iii) இடைக்கால அறிக்கைகள் மற்றும் கா.சா வழங்கும் செயற்பாடுகள்; (iv) மரணச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதிலும் காணாமல் போனோரைத் தேடுவதிலும் உள்ள பொதுவான சட்டச் சிக்கல்கள் பற்றிக் குடும்பங்கள் எழுப்பும் கேள்விகள்.	
2 – 3 யூன்	மட்டக்களப்பு அலுவலகத்தில் அப்பிராந்திய ஊழியர்களுக்கு கா.ஆ.அ இன் கடப்பாடு பற்றியும் தற்காலிக தரவுத்தளம் மற்றும் அதைப் பாதுகாப்பதிலுள்ள சிக்கல்கள் பற்றியும் பாதுகாப்பு மற்றும் தரவுத்தளத் தலைவர் ஆணையாளர் ரஹீம் பயிற்சி வழங்கினார்.	5
11 யூன்	யாழ்ப்பபாண அலுவலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் அலுவலக ஊழியர்களுக்கு கா.ஆ.அ இன் கடப்பாடு பற்றியும் தற்காலிக தரவுத்தளம் மற்றும் அதைப் பாதுகாப்பதிலுள்ள சிக்கல்கள் பற்றியும் பாதுகாப்பு மற்றும் தரவுத்தளத் தலைவர் ஆணையாளர் ரஹீம் மற்றும் ஆணையாளர் வேந்தன் ஆகியோர் பயிற்சி வழங்கினார்.	8
11 யூலை	இடைக்கால அறிக்கைகள் வழங்கும் செயற்பாடுகளுக்கு விசாரணை அலுவலர்களாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட கா.ஆ.அ ஊழியர்கள் தொடர்பில் முதுநிலை சட்ட ஆலோசகர் சட்டத்தரணிகளுக்கான நிகழ்வு ஒன்றை நடத்தினார்.	3
12 – 13 செப்ரம்பர்	கா.ஆ.அ இன் ஊழியர்களுக்கான அடையாளம் பற்றியும் கா.ஆ.அலுவலகம் சார்பில் தோற்றும் சட்டவாதிகள் சம்மபந்தமாகவும் முதுநிலை சட்ட ஆலோசகரும் தடயவியல் நிபுணருமான ஆணையாளர் ரஹீம் ஒரு பயிற்சியை நடத்தினார்.	5

தகவலுக்கான உரிமை

6.25 2016 இல. 12 இன் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்படி கா.ஆ.அ இல் உள்ள தகவல்களை அணுகுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். 2019 மற்றும் 2020 காலப்பகுதிகளில் தகவலுக்கான உரிமையை எவ்வாறு கா.ஆ.அ செயற்படுத்தியது என்பதைக் கீழுள்ள அட்டவணை குறிக்கின்றது.

இல.	விடயம்	நாட்களின் எண்ணிக்கை
1	2019 மற்றும் 2020 இல் கோரப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை	8
2	பூரணமாகத் தகவல்கள் வழங்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை	8
3	பகுதியளவில் தகவல்கள் வழங்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை	0

4	சட்டத்தின் பிரிவு 5 இன்படி நிராகரிக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை	0
5	சட்டத்தின் பிரிவு 5 இற்கு அப்பால் மறுக்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை (எ.கா. தகவல்களின்மை)	0
6	தகவலுக்கான கோரிக்கையைப் பெற்றதும் அதற்கு பதில் வழங்குவதற்கு எடுத்துக்கொண்ட சராசரி காலம் (வேலை நாட்களின் எண்ணிக்கை)?	11 நாட்கள்
7	தபால் மூலம் பெற்றுக்கொண்ட தகவலுக்கான கோரிக்கைகள் எத்தனை?	8
8	மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொண்ட தகவலுக்கான கோரிக்கைகள் எத்தனை?	0
9	தபால் மின்னஞ்சல் தவிர்ந்த வேறு வழிகள் மூலம் பெற்றுக்கொண்ட தகவலுக்கான கோரிக்கைகள் எத்தனை?	0

7. தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல்

7.1 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள், விளைவுகள், காரணிகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும் அவர்களின் உறவினர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பொதுமக்கள் ஆதரவை உருவாக்குவதற்கும் கா.ஆ.அ கடப்பாடுடையது[48]. 2018 இல் அது தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் கடப்பாடுகள் மற்றும் கடமைகளைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காக தொடர்பாடல்களையும் தொடர்புகொள்ளும் உபாயங்களையும் கா.ஆ.அ உருவாக்கியுள்ளது. மேலும் காணாமலாக்கப்படுவதன் எதிர் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல்; காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரினதும் அவர்களது குடும்பங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசினதும் சமூகத்தினதும் பொறுப்பு மற்றும் கா.ஆ.அ பற்றிய பிழையான கருதுகோள்களை இல்லாதொழித்தல் போன்றனவும் அவற்றுள் அடங்கும். இதன் முடிவாக கா.ஆ.அ இன் பணிகளை ஆவணங்கள் வாயிலாகவும் அச்சு ஊடகங்கள் மூலமும் கா.ஆ.அ இன் எண்ணிம மற்றும் தொடர்பாடல் தளங்கள் வாயிலாகவும் காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களும் பிரதான பங்குதாரர்களும் பொதுமக்களும் அறிந்துகொள்ள முடியும் என்பதை கா.ஆ.அ உறுதிப்படுத்தியுள்ளது[49].

7.2 தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு தொடர்பாடலைக் கண்காணிப்பதும் நிருவாக உறுப்பினர்கள் கண்காணித்த தொடர்பாடல் சாதனங்களைத்

[48] கா.ஆ.அ சட்டம் பிரிவு 13(ஒ)

[49] மின்னஞ்சல் ompsrilanka@gmail.com ருவிற்றர் https://twitter.com/ompsrilanka முகநூல் https://www.facebook.com/ompsrilanka

தயாரிப்பதுமாகும். இப்பிரிவின் தலைமைப் பதவிக்கான நேர்முகங்களை கா.ஆ.அ நடத்தியது. இருப்பினும் நிபந்தனைக்குட்பட்ட திறனும் துறையனுபவமும் உள்ள அபேட்சகர் ஒருவரையும் தெரிவுசெய்ய முடியவில்லை.

பொது நிகழ்வுகள்

7.3 நிலவும் கொவிட்-19 கொள்ளை நோய் காரணமாக அனைவரின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு பொது நிகழ்வுகள் எவற்றையும் கா.ஆ.அ நடத்த முடியவில்லை.

ஊடகங்களுடனான தொடர்பு

7.4 ஊடக அறிக்கைகள் மூலமாகவும் பத்திரிகையாளர் மாநாடுகள் செவ்வி காணல்கள் ஆசிரியர் தலையங்கத்தின் எதிர்ப்பக்க ஆக்கங்கள் போன்றவற்றின் மூலமும் ஊடகங்களினூடாக வரும் தகவற்கோரிக்கைகளுக்கு மறுமொழிகளை வழங்கியும் கா.ஆ.அ ஊடக தொடர்பைப் பேணியுள்ளது. இவ்வூடக தொடர்புகள் மூலமாக தனது பணிகள் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதையும் தப்பெண்ணங்களைக் களைவதையும் கா.ஆ.அ நாடியுள்ளது.

7.5 2020 இல் கா.ஆ.அ பின்வரும் ஊடக அறிக்கைகளை வெளியிட்டுள்ளது:

திகதி	தலைப்பு
15 சனவரி	"கா.ஆ.அ சட்டத்தினை மீளாய்வு செய்தல்"[50]
2 பெப்ரவரி	"காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான தற்காலிக தகவற்பட்டியல் கணக்கெடுப்பு"[51]
10 பெப்ரவரி	"இடைக்கால அறிக்கைகள் வழங்குவதை கா.ஆ.அ ஆரம்பிக்கின்றது"[52]
03 மார்ச்சு	"காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு"[53]
07 ஏப்பிறல்	"கொவிட்-19 நிவாரணம் தொடர்பில் அதிமேதகு சனாதிபதிக்கும் பிரதமருக்கும் சனாதிபதி செயலணியின் தவிசாளருக்கும் கடிதங்கள்"[54]
26 நவம்பர்	"காணாமற் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமாக கா.ஆ.அ பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளினதும் தகவல்களினதும் பட்டியல்"[55]

7.6 2020 இல் நடைபெற்ற நிகழ்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிருவாக உறுப்பினர்களும் ஊழியர்களும்:

திகதி	நிகழ்வு

[50] கா.ஆ.அ 'ஊடக அறிக்கை" 15.01.2021 https://twitter.com/ompsrilanka/status/1217345382071574528?s=20

[51] கா.ஆ.அ "காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் தற்காலிக பட்டியற் கணக்கெடுப்பு" 02.09.2020 < https://twitter.com/ompsrilanka/status/1226365980651196416?s=20 >

[52] கா.ஆ.அ "இடைக்கால அறிக்கை வழங்குவது தொடங்கியது" 30.12.2020 https://twitter.com/ompsrilanka/status/1226752435957436417?s=20

[53] கா.ஆ.அ "இரண்டாம் ஆண்டு நிறைவு" (03.03.2020) <https://twitter.com/ompsrilanka/status/1234754919489572870?s=20> 30.12.2020

[54] https://twitter.com/ompsrilanka/status/1247805580758011907/photo/1 07.04.2020

[55] https://twitter.com/ompsrilanka/status/1331910889310621696 26.11.2020

23 செப்ரம்பர்	வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடுவதும் விசாரிப்பதும் சம்பந்தமான நிகழ்நிலை செயலமர்வு ஒன்றில் ஆணையாளர் கலாநிதி நிமல்க பெணான்டோ பங்குபற்றினார். அது ப.வ.கா.செ ஐக்கிய நாடுகளின் செயற்குழுவின் 40 ஆம் வருட நிறைவையொட்டி நடைபெற்றதுடன் வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச சமவாயத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவையொட்டியும் நடைபெற்றது.
16 டிசம்பர்	மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தால் நடத்தப்பட்ட "இழப்பீடுகளின் ஊக்கச் சக்தி" என்னும் தலைப்பிலான நிகழ்நிலைக் கருத்தரங்கு ஒன்றில் ஆணையாளர் திரு. மிராக் ரஹீம் "இழப்பீடுகளுடன் தொடர்புடைய குழப்பநிலைகள்" என்னும் தலைப்பில் சமர்ப்பிப்பு ஒன்றை வழங்கியிருந்தார்.

எண்ணிம வெளியீடு

7.7 கா.ஆ.அ எண்ணிம தளத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுடன் தொடர்பைப் பேணுவதற்காக ருவிற்றர்[56] முகநூல்[57] போன்ற பல்லூடகங்களில் கணக்குகளைப் பேணியுள்ளது. 2020 டிசம்பர் 22 வரையில் 5,149 தொடருநர்களை முகநூலிலும் 1,866 தொடருநர்களை ருவிற்றரிலும் கா.ஆ.அ கொண்டுள்ளது.

7.8 கா.ஆ.அ பற்றிய தகவல்களையும் அதன் பணிகளையும் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு வசதியாக உத்தியோகபூர்வ இணையதளத்தை[58] ஆங்கிலத்தில் கா.ஆ.அ 2020 நவம்பர் 19 இல் ஆரம்பித்தது. 2020 டிசம்பர் 22 வரையில் அவ் இணையதளத்துக்கு 50 பேர் சமுகம் தந்துள்ளனர். அவ்வினைய தளத்தை சிங்களத்திலும் தமிழிலும் அணுகுவதற்கான வசதி 2021 சனவரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

8. நினைவேந்தலும் நினைவுகூரலும்

8.1 காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கான கடப்பாடு கா.ஆ.அ இற்கு உண்டு என்பதுடன் நினைவேந்தல் மற்றும் நினைவுகூரல் தொடர்பில் சிபாரிசுகளைச் செய்வதற்கும் கடப்பாடுடையது[59]. குடும்பங்களின் உரிமைகளுக்குப் பக்கபலமாக இருப்பதற்கும் அவர்கள் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு ஆதரவு வழங்குவதற்கும் பொதுமக்கள் ஆதரவு வழங்குவதை கா.ஆ.அ நாடுகின்றது. மேலும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் உரிமைகளை அரசும்

[56] "கா.ஆ.அ ருவிற்றர் கணக்கு" 24.06.2018 https://twitter.com/ompsrilanka 22.12.2020
[57] "கா.ஆ.அ முகநூற் கணக்கு" 23.10.2018
[58] "கா.ஆ.அ இன் 19.11.2020 இணையதளம்" 22.12.2020 <www.ompsrilanka.org>
[59] கா.ஆ.அ சட்டம் பிரிவு 13(1)(ஒ)(ஓ)(ii).

சமூகமும் ஏற்று அங்கீகரித்து செயற்படுவதை உறுதிப்படுத்துவதையும் கா.ஆ.அ நாடுகின்றது.

8.2 காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொது சமூக நிறுவனங்களின் உறுப்பினர்களுடைய பங்கேற்புடன் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டு பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை நான்காவது வருடமாக கா.ஆ.அ கொழும்பிலுள்ள தனது தலைமை அலுவலகத்தில் அனுட்டித்தது. நிலவும் கொவிட்-19 கொள்ளை நோய் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பெரியளவிலான ஒன்றுகூடலை நடத்துவதற்கு முடியவில்லை. கட்டுப்பாடுகளையும் மீறி, குடும்பங்களின் உரிமைகளையும் அல்லல்களையும் நினைவுபடுத்துவதற்காகவும் காணாமலாக்கப்படுவது பற்றிய பாரிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாகவும் கா.ஆ.அ இத்தினத்தை நினைவுகூர்ந்தது.

8.3 நிகழ்வில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உரிமைகள் பற்றியும் காணாமலாக்கப்படுவது பற்றிய அறிந்துகொள்வதன் அவசியம் குறித்தும் முன்னாள் தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் உரையாற்றினார். இடைக்கால நிவாரணம் வழங்குதல் தொடர்பாகவும் அத்தகை நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும் திரு. பீரிஸ் கலந்துரையாடினார். கா.ஆ.அ தயாரித்துள்ள முறைப்பாடுகள் மற்றும் தகவல்கள் அடங்கிய பட்டியலின் முக்கியத்துவம் பற்றியும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் நலன்களையும் மேம்படுத்துவதற்கு அந்தப் பட்டியலை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறு உபயோகப்படுத்தலாம் என்பது பற்றியும் ஆணையாளர் திரு. மிராக் ரஹீம் உரையாற்றினார்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
நிதியியில் நிலைமைக் கூற்று
2020 டிசம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு

சொத்துக்கள்	குறிப்பு	2020 (ரூபாய்)	2019 (ரூபாய்)
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	1	28,102,075.67	33,668,713.34
சர்வதேச ஞாபகார்த்த தினம்			5,497,564.70
நடைமுறைச் சொத்துக்கள்			
முற்கொடுப்பனவு செலவினங்கள்	2	36,108.00	
பெறத்தக்கன	3	365,330.40	310,000.00
மொத்த சொத்துக்கள்		**28,503,514.07**	**39,476,278.04**
பொறுப்புக்கள்			
நடைமுறை அல்லாத பொறுப்பு			
பணிக்கொடை ஏற்பாடு		743,120.00	
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறுச் செலவினங்கள்	4	4,312,609.44	5,199,967.17
கடன் கொடுநர்கள்	5	27,830.00	37,268.56
செலுத்த வேண்டிய சம்பளம்	6	24,603.13	120,603.10
மொத்த பொறுப்புக்கள்		**4,365,042.57**	**5,357,838.83**
தேறிய சொத்துக்கள் / பங்குரிமை			
தேசிய சொத்துக்கள்	7	23,395,351.50	34,118,439.21
மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்பு		**28,503,514.07**	**39,476,278.04**

உறுதிப்படுத்துதல்

மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நடவடிக்கைகள் உண்மையாகவும் நியாயமாகவும் முன்வைக்கப்பட்டுள்ளதாக சான்றளிக்கிறோம்.

.....
டீ. ஏ திஸாநாயக
பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்வனவு)

.....
வீ. பீ பேர்ல் கே. வீரசிங்ஹ
நிறைவேற்றுப் பணிப்பாளர்

நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னளிப்பு செய்வது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டடு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டது.

.....
கௌரவ நீதிபதி உபாலி அபேரத்ன
தலைவர்

.....
எம்.ஏ மல்டிதேவி பீரிஸ்
சபை உறுப்பினர்
(ஆணையாளர்)

.....
மிராக் ரஹீம்
சபை உறுப்பினர்
(ஆணையாளர்)

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

வருமானம் மற்றும் செலவினக் கூற்று

2020 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கானது

	குறிப்பு	2020 (ரூபாய்)	2019 (ரூபாய்)
வருமானம்			
வருமானம் - மீண்டுவரும் மானியம்		81,300,000.00	64,039,036.37
மொத்த வருமானம்		**81,300,000.00**	**64,039,036.37**
செலவினங்கள்			
தனிப்பட்ட செலவினங்கள்	8	39,520,158.83	25,853,203.06
போக்குவரத்து செலவினங்கள்	9	2,845,326.00	4,333,055.88
வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகரத்தக்கன	10	2,843,155.99	7,628,739.02
பராமரிப்பு செலவினங்கள்	11	357,896.18	1,344,602.98
தேய்மானம்		5,763,215.89	698,309.68
சேவைகள்	12	33,023,155.77	31,626,346.98
மொத்த செலவினங்கள்		**84,352,908.66**	**71,484,257.60**
வருடத்துக்கான மிகை/ பற்றாக்குறை		**(3,052,908.66)**	**(7,445,221.23)**

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

பங்குரிமை மூலதன மாற்றக்கூற்று

2020 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கானது

	திறைசேரியினால் வழங்கப்பட்ட மூலதன மானியம்	திரட்டு நிதிகள்	வருடத்துக்கான மிகை/ (பற்றாக்குறை)	மொத்தம்
	(ரூபாய்)	(ரூபாய்)	(ரூபாய்)	(ரூபாய்)
2019/01/01 இல் உள்ளவாறு ஆரம்ப நிலுவை	-	5,373,654.59	-	5,373,654.59
திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம்	24,892,401.27	-	-	24,892,401.27
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த மூலதன மானியம்	8,497,942.00	-	-	8,497,942.00
முந்திய மிகை/ (பற்றாக்குறை) சீராக்கல்	-	-	1,814,545.00	1,814,545.00
2019 ஆம் ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை)	-	-	(7,445,221.23)	(7,445,221.23)
முந்திய ஆண்டுக்கான சீராக்கல்	-	985,117.58	-	985,117.58
2019/12/31 இல் உள்ளவாறு நிலுவை	33,390,343.27	6,358,772.17	(5,630,676.23)	**34,118,439.21**
2019/01/01 இல் உள்ளவாறு ஆரம்ப நிலுவை	-	34,118,439.21	-	34,118,439.21
முந்திய ஆண்டுக்கான சீராக்கல்	-	(8,370,179.05)	-	(8,370,179.05)
திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம்	700,000.00	-	-	700,000.00
2019 ஆம் ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை)	-	-	(3,052,908.66)	(3,052,908.66)
2020/12/31 இல் உள்ளவாறு நிலுவை	700,000.00	25,748,260.16	(3,052,908.66)	**23,395,351.50**

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசு பாய்ச்சற் கூற்று

	குறிப்பு	2020 (ரூபாய்)	2019 (ரூபாய்)
தொழிற்படு நடவடிக்கைகள்			
காசு பெறுகைகள்			
நிதிகள் - மீண்டுவரும்		81,300,000.00	63,935,713.87
நீர் மற்றும் மின்சாரத்துக்காக ஜனாதிபதி /அமைச்சரவை அலுவலகங்களிலிருந்து கிடைத்தவை		651,007.40	2,036,492.81
பாதுகாப்பு சேவைகளுக்காக இழப்பீட்டு காரியாலயத்திலிருந்து கிடைத்தவை		308,207.36	-
ஏனைய பெறுகைகள்		307,874.00	39,685.31
காசுக் கொடுப்பனவுகள்			
சம்பளங்களும் வேதனங்களும்		(28,992,795.78)	(15,124,076.91)
விடுமுறை கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரம்		(175,908.91)	(481,505.78)
ஏனைய உதவிப்படிகள்		(12,040,802.63)	(10,239,701.45)
பிரயாணம் மற்றும் துணை உபகார படி – உள்நாடு		(2,535,296.00)	(3,086,592.41)
பிரயாணம் மற்றும் துணை உபகார படி – வெளிநாடு		-	(1,321,145.91)
காகிதாகிகள் மற்றும் அலுவலக பொருட்கள்		(1,779,703.70)	(2,481,226.98)
எரிபொருள் செலவினங்கள்		(1,099,535.11)	(1,330,741.92)
உணவு மற்றும் சீருடை		(690,755.60)	(2,903,439.28)
வாகனப் பராமரிப்பு		(172,006.01)	(252,087.05)
பொறி மற்றும் இயந்திர பராமரிப்பு		(176,522.17)	(704,051.20)
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்		(80,301.00)	(353,614.73)
போக்குவரத்து		(3,600,945.91)	(3,143,989.91)
தபால் மற்றும் தொடர்பாடல்		(2,916,727.34)	(8,612,625.73)
விளம்பரம் மற்றும் செய்திப் பத்திரிகை செலவினங்கள்		(100,908.40)	-
மின்சார விலைப்பட்டியல்கள் மற்றும் தண்ணீர் விலைப்பட்டியல்கள்		(2,657,697.94)	(4,838,424.66)
வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள்		(13,801,554.22)	(1,148,283.37)
ஏனைய சேவைகள் கட்டணங்கள்		(3,766,827.74)	(10,650,834.01)
சர்வதேச ஞாபகார்த்த தினம்		-	(5,497,564.39)
சுத்திகரிப்பு சேவை		(1,582,597.40)	-
பாதுகாப்பு சேவைகள்		(5,876,699.70)	-
இடைக்கால அறிக்கை விசாரணை		(541,514.00)	-
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்	**13**	**(22,010.80)**	**(6,158,013.70)**
முதலீட்டு நடவடிக்கைகள்			
கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்களுக்கான கொடுப்பனவு		-	(808,304.00)
தளபாடம் மற்றும் பொருத்தல்களின் கொள்வனவு		(513,502.20)	(3,466,302.43)
பொறி, இயந்திரம் மற்றும் உபகரணக் கொள்வனவு		(164,487.00)	(12,631,666.00)
அலுவலக உபகரணக் கொள்வனவு			-
நிதிகள் - முலதனம்		700,000.00	23,064,286.13
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்		**22,010.80**	**6,158,013.70**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய குறைப்பு / (அதிகரிப்பு)		0.00	0.00
வருடத்தின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும்		0.00	0.31
